
திருக்குடந்தை

# அருள்மிகு சார்ங்கபாணி சுவாமி ஆலய

# தல வரலாறு



வெளியீடு :

அருள்மிகு சார்ங்கபாணி சுவாமி திருக்கோயில்

கும்பகோணம்.

(1976)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்தமகாதேசிகாய நம:

# திருக்குடந்தை ஸ்ரீ சார்ங்கபாணி சுவாமி

# தல வரலாறு

—※—


பா. சண்முகநாதன்
செயல் அலுவலர்



ஆசிரியர்:
பக்தமணி, தஞ்சை
என். எஸ். தாதாசாரியார்



வெளியீடு:
ஸ்ரீ சார்ங்கபாணி சுவாமி தேவஸ்தானம்
கும்பகோணம்.

—ரிமை ] 1976 [விலை 1—00

ஸ்ரீ:
ஸ்ரீ கோமளவல்லீ நாயிகாஸமேத
ஸ்ரீமத் அபர்யாப்தாம்ருத பரப்பிரம்மணே நம:
ஆழ்வார் - இராமாநுசன் - ஸ்ரீ தேசிகன் திருவடிகளே சரணம்.

**மூவரில் முதல்வனாய ஒருவனை, உலகம் கொண்ட**
**கோவினை, குடந்தை,மேய குருமணித் திரளை,இன்பப்**
**பாவினை, பச்சைத்தேனை, பைம்பொன்னை, அமரர்சென்னிப்**
**பூவினை புகழும் தொண்டர் என்சொல்லிப் புகழ்வாதாமே.**

**— திருக்குறுந்தாண்டகம்.**

**ஸ்ருத பூபார தைதேய, க்ருதவிச்வ ஜநாவந ।**
**சார்ங்கபாணே, சரணம் தேலக்ஷ்யம் பாபாநிமேதுநா ॥**

# நூன்முகம்

அமுதமும் தமிழும் ஒன்றென்பார்கள். கூர்ந்து நோக்கினால், அமுதத்தைவிடத் தமிழ் பலமடங்குச் சிறப்புற்றதாகும். "அமுதினும் ஆற்ற இன்சொல்" என்றே தமிழ்தனைக் கூறுவார்கள். அத்தகைய தமிழும் மயர்வறமதிநல மருளப்பெற்ற மாலுகந்த ஆசிரியர்களான ஆழ்வார்களின் திருநாவில் தவழ்ந்து, தளர்நடையிட்டுப் புறப்பட்டுப் பக்தர்களின் செவிவழிபுகும் பொழுதும், சிறப்பாகக் குடந்தை ஆராவமுதன் பெருமை என்னும் முத்தாரமிட்டுத் தாவிவரும்பொழுதும் "திவ்யாம்ருத மாகவே" இருக்கும் பிறவிப் பிணிபோக்கும்,இந்தத் திவ்யாம்ருதம் சிந்திக்கத் தித்திக்கும், வந்திக்கப்பெருநிலமளிக்கும். கைங்கர்யம் ஆகிய பரம புருஷார்த்தத்தைத்தரும், விண்ணோர்களையும் விருந்திட்டு இவ்வுலகத்திற்கழைக்கும். மறைகளெல்லாம் காணவொட்டாத கார்முகில்வண்ணனைப் பயிலுவோர் முன்

நிறுத்தி "பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய், கமலச் செங்கண்" என்றபடிக்கு கண் ஒத்தி ஒத்தி அனுபவிக்கப் பண்ணும். அதனால்தான் நம்மாழ்வார் அருளிச்செயல் தமிழை, "பக்தாம்ருதம்," "ஸர்வார்த்தம்" என ஸ்ரீமந் நாதமுனிகள் சிறப்பித்தார் அருளிச்செயலை "ஈரச்சொல்" என்றே பெரியோர்கள் அழைப்பார்கள். "ஈரச்சொல்" என்றால் அன்பு நிறைந்தசொல் என்று சொற்பொருள். ஆனால் இந்த இடத்து "ஈரச்சொல்" என்பதற்கு அன்பு என்றே அழைக்கப்படும். பகவானின் வசனம் என்றும் பொருள் கூறலாம். வாடாத, வற்றாத, சொற்களே இவை. மற்றும் மெய்ப்பொருளைக் கண்ட ஆழ்வார்களின் ஸ்ரீ சூக்திகள் இன்சொலாகவும், படிறு அற்றதாகவும் இருக்கும்.

இக்கருத்தை உணர்த்துவதுபோல "இன்சொலால் ஈரம் அளை இப்படிறு இலவாம், செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்" என்ற திருக்குறளின் பா அமைந்திருக்கிறது. இக்குறளில் வரும் "மெய்ப்பொருள்கண்டார்" என்ற சொல் ஆழ்வார்களையும், "வாய்ச்சொல்" என்ற சொல், "திருவாய்மொழியை" குறிப்பது போலும் அமைந்துளது. திவ்வியப்பிரபந்தங்களுக்குத் திருப் பெயர்கள் சூட்டியதாகக் கூறப்படும். ஸ்ரீமந் நாதமுனிகள் திருவுள்ளத்தில் இக்குறளின் பா வரி அடியிட்டிருக்கலாம் போலும். திருநாட்டில் என்றும் "ஸாமகானம்" பயின்றே பகவானை அனுபவித்து மகிழும் நித்யசூரிகள், திருவாய்மொழி இன்பநாதம் கேட்கவும் இன்பொருள் சுவைக்கவும் இம்மண்ணுல கத்திற்குப் பந்துகுழாமாகக்கூடிவிடவே நம்மாழ்வார் "பொலிக பொலிக! பொலிக! போயிற்று வல்லுயிர் சாபம்" என அருளினார்போலும். இதனால் நித்திய சூரிகளுக்கும், அரும் திவ்வியத் தமிழுக்கும் ஆழ்வார் பல்லாண்டு பாடினார், என்றெல்லாம் அனுபவ ரசிகர்களின் அனுபவவைகரி. இத் தமிழைச் சுவைக்கவே பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் பரம்பொருளான பகவான் இந்த லீலாவிபூதியில் அர்ச்சாவதார வ்யாஜேன அவதரித்துப் புகுந்த இடத்தையே தகுந்த இடம் ஆக்கிக் கோயில்கொண்டு நின்றும், இருந்தும், கிடந்தும் பல படிகளில் எழுந்தருளி இத்தமிழின் இன்சுவையை அசையிட்டுச் சுவைக்கிறார் எனலாம். இதுகொண்டே மழிசைவந்த மாபெரும் சோதியாம் பக்திஸாரர் "பிறந்தபின் மறந்திலேன் நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என் நெஞ்சுளே" என அருளிச்செய்தார் போலும். இந்த ஆழ்வார் நெஞ்சம் ஒரு தமிழமுதூறும் நெஞ்சமன்றோ? இவ்வாறு பல்லாற்றாலும் எல்லையில்லா மூலப்

பொருள்போல் சிறப்புற்ற இந்தத் திவ்வியப் பிரபந்தங்களின் தமிழ் மறைந்து பட்ட காலத்தில் முற்றும் மறையாமல் இருக்க "ஆராவமுதே" என்ற நம்மாழ்வார் பதிகத்தை மட்டும் திருக்காப்பிட்டு வைத்திருந்து, நாதமுனிகளின் மூலமாய் நல்லுலகத்திற்குக் காட்டித்தந்த பெருமை நம் குடந்தையம் கோவலன் ஸ்ரீ ஆராவமுதனுக்கே அன்றோ? ஏற்பட்டது. ஆகவேதான் அருந்தன் திருமழிசை ஆழ்வாரை "பிரான்" ஆக்கித்தான், ஆராவமுதாழ்வான் ஆனர். புதைத்திருந்த தமிழ்ப்புதையலை வாரி அளித்த புனித வள்ளல் நம் அமுதனன்றோ? இதனால் தானோ, திருமழிசைப்பிரான் திருவாயிலிருந்து "கிடந்தவாறு எழுந்திருந்து பேசு" என்று தமிழ்மொழி அன்பு ஆணை ஏற்பட்டதுமே அர்ச்சாஸமாதியையும் மீறிப்பாம்பணையில் இருந்து எழுந்துவிட்டார் என்பார்கள். நான்காகப்பிரிந்த திவ்வியப்பிரபந்தங்களை திருக்கையிட்டருளப் போகிறுர் என்பதைக் கொண்டு இவ்வமுத வள்ளலை நம்மாழ்வார் "நாற்றோள் என் தாய்" என மங்களாசாஸனம் செய்தார் போலும். தமிழ் வேதமாகிய இந்த பிரபந்தங்களைப் பாதுகாஸ ஹஸ்ரத்தில் ஸ்ரீஸ்வாமிதேசிகன். "ப்ராசீனும் ச்ருதிபரிஷதாம் பூர்வகண்யா" அதாவது பழைய நான்மறைகளுக்கும் முந்திநிற்பதாய் அருளினர் இந்த பிரபந்தங்களைத் திவ்வியப் பிரபந்தம் என்றும் இவற்றை அருளிச்செய்த ஆதிபக்தர்களைத் திவ்வியசூரிகள் என்றும் ஆழ்வார்களின் அருளிச் செயல்பெற்ற தலங்களைத் "திவ்விய தேசம்" என்று மூன்று திவ்வியங்களாகப் பெரியோர் பிரித்தனர் அமிர்தமயமான ப்ரும்மானுபவஸ்ாகரத்தில் தாமும் ஆழ்ந்து, நம்மையும் ஆழச்செய்பவர்களே ஆழ்வார்களாவார்.

இத்தகைய ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட திவ்விய தேசங்கள் நூற்றெட்டில், திருவரங்கத்திற்கும் திருவேங் கடத்திற்கும் அடுத்தபடியாகப் பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார் என்ற ஏழு ஆழ்வார்கள் பாடிய மாபெரும் புண்ணிய க்ஷேத்திரமே பொன்னி சூழ் பொன்னரங்கம் போன்ற திருக் குடந்தையாகும். அரங்கனும், திருவேங்கடவனும் அமுதனும் மூவரும் ஒருவரே என்பர் பெரியோர். அதிலும் அரங் கனையும் அமுதனையும் மிகவும் ஒற்றுமைப்படுத்திப் பேசும் "விபவம் (பெருமை) கோயிலிலே (திருவரங்கத்திலே) ஸௌந் தர்யம் (எளிமையின் அழகு) குடமூக்கிலே" (திருக்குடந்தையிலே) என்ற பழமொழியும் எழுந்தது.

**வைகுண்டநாத: சார்ங்கேச: ரங்கநாதோ மஹாப்ரபு:|**
**ஏக ஏவ த்ரி ரூபோஸௌ லோகரக்ஷண ஹேதவே:||**

என்று ஆராவமுதாழ்வான் வைபத்தில்'' வைகுண்டநாதனே அமுதன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால்தான் அமுதன் எழுந்தருளியுள்ள ஸந்நிதிக்குத் ''திருமாமணிமண்டபம்'' எனத் திருபெயர் ஏற்பட்டது. உண்மையில் இத் தலத்துக்கு எழுந்தருளிச் செம்மா கமலம் செழுநீர் மிசை கண்மலரும் திருக் குடந்தை அம்மானை ஆசை நிரம்ப அனுபவிப்பது ஒரு பாக்கியமே யாகும். அமுதனைக் காணாத கண் என்ன கண்ணே! அவன் புகழ் பாடாத நாவென்ன நாவே!

## திருக்குடந்தை

திருவரங்கத்தில் போல், இக்குடந்தைத் தலத்தில் எழுந்தருளி யிருக்கும் மூலவர் வடிவான ''அமுதனுக்கும்'' உத்ஸவர்வடிவான ''ஸ்ரீ சார்ங்கராஜனுக்கும்'' தனிச்சிறப்பும், ஆழ்வார் அருளிச் செயல்களும் உண்டானதால் இத்தலத்தை ''உபயப்ரதான க்ஷேத்திரம்'' என்றும் அழைப்பார்கள் :- ஆழ்வார்கள் ''ஆராவமுதே அடியேன் உடலம்'' என்றும், ''ஆராவமுதே அடியேற்கருளாயே'' என்றும் இப்புடையில் பள்ளிகொண்ட அமுதனையும் ''விற்குனித்தவிற்கை வீரனே'' என்றும், ''சார்ங்க விற்சேவகனே'' என்றும் இப்புடையில் உத்ஸவர் ஸ்ரீ சார்ங்க ராஜனையும் தனித்தும் அருளிச் செய்துள்ளார்கள். இத்துடனமை யாது, ''பொற்றாமரைக்கயம் நீராடாப் போனாள்'' என்ற முறையில் தலத்து ஹேமபுஷ்கரிணிக்கும் ''தூநிலா முற்றத்தே போந்து விளையாடவா'' என்ற முறையில் கோயில் ஸ்ரீ ஆண்டாள் சந்நிதி வடக்கு ப்ராகாரத்துக்கும், ''ஐவர்க்காய் அமரில் உய்த்த தேராளன்'' என்று திருத்தேர் எம்பிரானுக்கும் அருளிச்செயல் ஏற்பட்டதும் மற்றும் ஒரு சிறப்பாகும்.

இத்தலத்துத் தேருக்கெனவே திருமங்கை ஆழ்வார் சித்திர கவியில் ''திருவெழு கூற்றிருக்கை'' என்ற அருமையான பிரபந்தத்தை அருளினார். இது எந்தத் திருப்பதிகளுக்கும் இல்லாத இது ஒரு தனி ஏற்றமாகும். திருமங்கை ஆழ்வார். இத் தலத்தில் விசேஷமாக அமைந்த திருத்தேர் போன்ற அமுதன் ஸந்நிதி கர்ப்பக்ருஹ மண்டபக்கல் தேரைக் குறித்துத் திருவெழு கூற்றிருக்கைத் திவ்யப்ரபந்தம் ஏற்பட்டதா? அல்லது வெளியே உள்ளதும், பிர்மோத்ஸவத்தில் ஸ்ரீ சார்ங்கராஜன் திருத்தேர்

கண்டருளும் மரத்தேரைக் குறித்து ஏற்பட்டதா? என்றெல்லாம் சிலர் ஐயம் எழுப்பலாம். பாசுரங்களில் வரும் "தேர்" என்ற சொல் கருவறைக் கல்தேரையும், திருவெழுகூற்றிருக்கை என்ற பிரபந்தம் ஸ்ரீ சார்ங்கராஜன் மரத்தேரையும் குறிக்கும் என்றே கருதுவது நலம் எனத் தோன்றுகிறது. அமுதன் கருவறைத் தேரை "சித்திரத் திருத்தேர்" எனவும், ஸ்ரீ சார்ங்கராஜன் மரத் திருத்தேரைச் "சித்திரைத் திருத்தேர்" என்றும் பிரித்து வ்யவஹரிக்கலாம் என்பாரும் உண்டு. பெரியோர்களைக் கேட்டு உணரலாம். வைகுண்ட ஏகாதசி (இராப் பத்து - பகல் பத்து) உத்ஸவம் திருவரங்கத்தில் சிறப்புற்றதுபோல், திருத்தேர் உத்ஸவம் திருக்குடந்தையிலேதான் சிறப்புடையதாகும். இதனால் தான் இத்தலத்துப் பெருமானைப் பரகாலநாயகியின் தாயார் "தேராளன்" என அழைத்தாள். மற்றும் திருக்குடந்தை என்ற நகரைத் தனித்தே பெயரிட்டு ஆழ்வார்கள் அருளிச் செயல் இட்டுள்ளார்கள். "செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை" "நலத்தால் மிக்கார் குடந்தை" "சூழ்புனல் குடந்தையே தொழுது" "தண் குடந்தை நகர்பாடி ஆடீர்களே" என்றெல்லாம் ஆழ்வார்கள் அழைத்தனர். முதன்முதலில் திருமணங்கொல்லையில் திவ்விய தம்பதிகளின் திருமந்திரோபதேசத்தைத் தலைகுவித்துப் பெற்ற திருமங்கை ஆழ்வார் தலை நிமிர்ந்ததும், நிமிராததுமாகத் திவ்விய தேசப்ரஸ்தாவம் இல்லாத பெரிய திருமொழி முதல் பதிகமான "வாடினேன் வாடிப் பதிகத்தில்"

> **"தூவி சேர் அன்னம் துணையொடும் புணரும்**
> **சூழ்புனல் குடந்தையே தொழுது என்**
> **நாவி னால்உய்ய நான்கண்டு கொண்டேன்**
> **நாராயணா என்னும் நாமம்"**

என வாய் வெருவிக் கூவினார். திருமழிசைப் பிரானும் தமது நான்முகன் திருவந்தாதிப் பாசுரம் 36ல் சில திருப்பதிகளின் திருப் பெயரைக் குறிப்பிட்டுப் பேசுகையில் முதலில் திருக் குடந்தைக்கு முதலிடம் தந்து, "நாகத்தணைக் குடந்தை" என அருளினார். இந்த ஆழ்வார் திவ்விய தேசயாத்திரையில் இத் தலத்துக்கு எழுந்தருளி அமுதனையும் ஸ்ரீ சார்ங்கராஜனையும் கருத்துறக் கண்ணளாவி அனுபவித்து இத்தலத்தைவிட்டு வேறிடம் செல்ல மனம் இன்றி இங்கேயே அமுதன் திருவடி நிழலிலேயே ஆயிரம் ஆண்டுகள் யோகநிலையில் எழுந்தருளிக் கடைசியில் திருநாடலங்கரித்தார் என்றால் இத்தலத்தின் பெருமைக்கு வேறு சான்றும் வேண்டுமோ? நம்மாழ்வார்

"செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை" என்று அருளிப் பாடிட்டபடிக்கு இத்தலத்துக்கு எழுந்தருளி இப்பெருமானை ஸேவிக்காத பெரியோர்கள் யாரும் இல்லை என்றும் கூறலாம்.

நம்மாழ்வார் அருளிச்செய்த "ஆராவமுதே" பாசுரத்தில் வரும் "செந்நெல்" என்ற சொல்லுக்குப் பொருள்நயம் கூறுகையில், பெரியோர்கள் திருவுள்ளம் பற்றுவதாவது :-

திருக்குடந்தை நெல்லுக்குச் செம்மையாவது - திருக்குடந்தையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களுக்கும் இப் பதியில் குழுமியிருக்கும் செழுமாமணிகளாகிய மஹான்களுக்கும் அமுதுபடிக்கும் பயன்படுவதால் நெல் செந்நெல்லாயிற்று என்பார்கள். மேலும் நம்மாழ்வார் திருக்குடந்தையைச் சிறப் பிக்கும்பொழுது இதே "ஆராவமுதே" பதிகத்தில் நான்காவது பாசுரத்தில் "நலத்தால் மிக்கார் குடந்தை" என்றும் வாய் மணக்க அருளினர். "செழுமாமணிகள்" என்ற சொல் நேர்கொடு நேராகத் "திருமழிசைப் பிரானை" உணர்த்தி நின்றாலும், பிறகு இப்புண்ணிய பூமியில் அவதரித்தும், நீண்டநாள் எழுந்தருளி யிருந்தும் அவ்வப்பொழுது குழுமி இருந்து கோஷ்டீபரிபாலனம் செய்தும் ஏற்றம்பெற்ற மகான்களையும் உணர்த்தும். ஸ்ரீ வைணவ-முனித்திரய ஸம்பிரதாயப் பிரவர்த்தகரும், திருவையாற்றுக்கு அருகில் உள்ள ராயம்பேட்டையில் அவதரித்தவரும் ஸ்ரீ கோபாலார்ய மஹாதேசிகன் என்று புகழ்ந்து போற்றப் பட்டவருமான திருக்குடந்தைத் தேசிகன் இத்தலத்தில் நித்திய வாஸம் பண்ணி, நாளடங்க அமுதனையும், ஸ்ரீ கோமளவல்லி நாச்சியாரையும் கண்குளிர மங்களாசாஸனம் செய்துகொண்டும், எம்பெருமான்களுக்கு அளவற்ற கைங்கரியங்கள் செய்துகொண்டும் ஒருகால் தமது திவ்ய திருமேனியால் எம்பெருமானை ஆலிங்கனம் செய்து, பெருமாளுக்கு மேலும் பாகவதகரஸ்பரிசத்தை உண்டுபண்ணியும் உகந்தார் என்றும் கூறுவார்கள். ஒரு ஸமயம் ஸ்ரீ சார்ங்கராஜன், திருத்தேர் உத்ஸவம் கண்டருளுகையில் பெருமாள் திருத்தேர் வீதியின் ஒருபக்கம் பலநாள் நிலைபெறுமல் நின்றுவிடவே, இத்திருக்குடந்தைத் தேசிகன் ஸ்ரீ சார்ங்கராஜனிடம் சரணாகதி பண்ணி அமுதுபடி செய்யாமல் இருக்க, உடனே பக்ஷிராஜன் மேல் பவனி வருவதுபோல் ஒருநொடியில் பெருமாள் திருத்தேருடன் நிலைக்கு எழுந்தருளிப் பக்த சரணாகதியைப் பாலிக்க வைத்தார் என்றும் வ்யவஹரிப்பதுண்டு. திருக்குடந்தை நாயன்மார்களின் தேவாரப்பாடல் பெற்ற ஒரு பெரும் சிவத் தலமாகவும் விளங்கும். "எங்கும் கோயில் எங்கும் கழனி" என்று

புகழப்படும் ஊர். தஞ்சைமாவட்டத்திலேயே ஒரு சிற்றடக்கமான மாபெரும் வியாபாரத் தலம். இந்நகரில் அம்மா அப்பாவைத் தவிர மற்றைய எப்பொருளும் கிடைக்கும் என நம்பி வரலாம் என்ற கருத்தில், "நம்பும் கும்பகோணம்" என்றதொரு பழமொழியும் சிலரிடையே நிலவி வருகிறது. ஸ்ரீமத் அகோபில மடம் 38வது பட்டம் ஸ்ரீமத் அழகிய சிங்கர் என்ன, இன்று எழுந்தருளியிருக்கும் திருக்குடந்தை ஸ்ரீமத் ஆண்டவன் என்ன, இப்புடையில் பல பெரியோர்களுக்கும் அவதார க்ஷேத்திரமும் இதுவே. இன்னும் கல்வி கேள்விகளுக்கு நிலைகளமாய், ஸுப்பிரசித்த வித்வான்களும், புலவர்களும், கவிகளும், கலைஞர்களும் இப்பதியில் விளங்கி வாழ்கிறார்கள்.
மற்றோர் சிறப்பும் இத்தலத்துக்கு உண்டு:

அதாவது:- சுமார் 320 ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து புகழ்பெற்ற மூன்று நாயக்க மன்னர்களில் மிகவும் சிறந்த "ரகுநாத நாயக்கர்" என்ற மன்னரின் ஆஸ்தான பண்டிதரும், குருவுமாகிய ஸ்ரீமத் உ. வே. ஐயா குமார தாதாசாரியர் என்ற பெரும் புலவர் இத்தலத்து எம் பெருமாளிடம் அளவுகடந்த ஈடுபாட்டுடன் பற்பல திருப்பணிகளைச் செய்தார். முன்பு இத்தலத்தில் விசாலமான ஸந்நிதியில் கோயில் கொண்டிருந்த ஸ்ரீ கோமளவல்லித் தாயாரின் திவ்விய மங்கள விக்ரஹத்தைச் சிலர் அங்கிருந்து எழுந்தருளப் பண்ணிப் பெருமாள் கர்ப்பக்கிரகத்திலேயே ஏக ஸிம்மாஸனத்தில் எழுந்தருளப் பண்ணிவிட்டார்களாம். அப்பொழுது தாயாருக்கு (அதிகாரார்ச்சைக்கு) ஒரு தனி சந்நிதி அவசியம் இருக்க வேண்டும் என கருதி, நாயக்கர் மன்னர் மூலம் இன்று ஸேவைதரும் அமுதன் தெற்குப் பிரகாரத்தில், இடத்துக்கு அமைய, ஒருசிறு ஆலயத்தை எழுப்பி அங்கு பிரதிஷ்டை செய்வித்தாராம். தாதாசாரியரின் இந்த ஆத்மஸ்வரூப கைங்கர்யத்தைப் பாராட்டும் முகமாகத் தாயார், மன்னன் கனவிலே ஆணையிட்டபடிக்குத் தாயார் சந்நிதிக்கு நேர் எதிரில் அந்தக் குமார தாதாசாரியர் சுவாமியின் திருவுருவத்தை எடுப்பித்து என்றும் நாச்சியாரின் திருமுக மண்டலத்தை ஸேவித்துக் கொண்டிருக்கும் வகையில் மன்னன் அப்படிவத்தை அமைத்து வைத்தாராம். அந்தப் புண்ணிய வடிவை நாம் இன்றும் காணலாம். இந்த தாதாசாரியரின் அந்தரங்க சீடரான ஸ்ரீ லக்ஷ்மீநாராயண சுவாமி என்பவர் முன்பு இக்கோயிலின் கீழ்க் கோபுரவாயில் பக்கம் வானளாவிய சிற்பக்கலை பரிமளிக்கும் ஒரு உன்னதமான கோபுரத்தை எடுப்பித்தாராம். அந்தக் கோபுரமே இன்றும்

அமுதன் பெருமையை வானில் சென்று உரைக்க எழுப்பியது போல் மிகவும் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. இதற்கு முன்பு பொற்றாமரைக் குளத்துமேல் கோபுரவாசலே நுழைவாயிலாகவும் இருந்ததாம். ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசாரியர் மடத்தின் தலைமையகம் இங்குத்தான் உள்ளது தமிழ்ப்பெரும் புலவர் திரு. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை இத்தலத்தைப் பற்றிய ஒரு நூலும் எழுதியுள்ளார் என்பர். கணிதமேதை ஸ்ரீ இராமானுஜன் என்பவர் பிறப்பிடமும் இந்த ஊரே. இந்த ஊரை தென்னிந்தியாவின் "கேம்ப்ரிட்ஜ்" எனவும் அழைப்பதுண்டு. இந்த ஊரின் தெற்கிலும், வடக்கிலும் அரிசொல்லாறும் காவிரியும் அணைத்துப் பெருக இது ஒரு தீவுபோல் தோன்றி திருவரங்கப் பெருநகர் போல் காட்சி அளிக்கும். வடக்கில் ஸ்ரீ காஞ்சீபுரமும், தெற்கில் ஸ்ரீரங்கமும், இடையே திருக்குடந்தையாக இம்மூன்று க்ஷேத்திரங்களையும் ஸ்ரீ வைணவ சமயத்தின் ராஜதானிகள் என்பார்கள். இத்தலத்தைப் பற்றி வாமநபுராணம் சேஷதர்மம், ஸ்ரீ ஆராவமுதாழ்வான் வைபவம் போன்ற நூல்களில் விரிவாகக் கூறப்படும் வகையில், எங்குச் செய்த பாபமும் காசியில்போகும். காசியில் செய்த பாபமோ திருக்குடந்தையில் அழியும், ஆனல் திருக்குடந்தையில் செய்த பாபத்தையோ எங்குச் சென்ருலும் நீக்கமுடியாது. இக்குடந்தையிலேதான் போக்கவேண்டும் எனக் கூறுகின்றன. இக் குடந்தையில் எழுந்தருளியிருக்கும் பெருமானை ஒரு முறை கண்களால் கண்டால் போதும் பிரம்மஹத்தி முதலிய தோஷங்களும் நீங்கும் என்ற கருத்துள்ள

**ப்ரம்ஹத்யாதயோ கோரா: மஹாபாதகஸஞ்சயா:!**
**கும்பகோணே சயாநஸ்ய விஷ்ணோ: நச்யந்தி தர்சனுத்!!**

என்ற புராணச் செய்யுளும் உண்டு. மற்றும் திருமழிசை ஆழ்வார் எழுந்தருளியிருந்த ஸந்நிதியும் இங்கு உள்ளது. இந்நகரின் பெருமைக்குக் குஞ்சலம் கட்டினாற்போல் இருபக்கங்களிலும் மாபெரும் திவ்விய தேசமாய், தென்திருப்பதி என்றழைக்கப்படுவதாய், பெரும் பிரார்த்தனைத் தலமாய் விளங்கும் ஒப்பிலியப்பன் சந்நிதியும், அதேபோல், முருகனது அறுபடை வீடுகளின் நான்காவதாய் திருவேரகம் என்று பெயர் பெற்ற தாய்ப் பெரும் பிரார்த்தனைத் தலமாய் விளங்கும் சுவாமிமலையும் உள்ளன. நகருக்குள்ளே சிறப்புகழ்பெற்று நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட ஸ்ரீராமன் கோயிலும், ஸ்ரீ சக்கரராஜன் கோயிலும், இவை போன்ற எண்ணற்ற பெருமாள் ஆலயங்களும் உள்ளன,

எங்கும் காணாத வகையில் இத்தலத்தில் "பிரமாவுக்கு" என் ஒரு தனிக் கோயிலும் உண்டு. சைவப் பெரும்புலவர் சேக்கிழார் என்பவர் பல நாட்கள் தங்கி இருந்த திருநாகேசுவரமும் இந் நகரின் அருகே உள்ளது. இவ்வூருக்கு அருகே உள்ள திருவாவடுதுறையில்தான் பல ஆண்டுகள் திருமூலர் தியான நிலையில் இருந்தார்.

பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நடக்கும் மாபெரும் திருவிழாவான "மகாமகப்" பிரசித்திபெற்ற ஊரும் இதுவே. இத்தலத்தைச் சுற்றிலும் உள்ள ஒப்பிலி அப்பன் கோயில், நாச்சியார்கோயில், திருச்சேறை, திருவெள்ளியங்குடி, ஆதனூர், புள்ளம்பூதங்குடி, கவித்தலம், ஆடுதுறைப் பெருமாள் கோயில், என்ற எட்டு பெரும் திவ்விய தேசங்களின் நடுவே ஒன்பதாவதாய் நாயகமணியாய் நவரத்தின மாலைகளின் நடுவே பதக்கம்போல் இத்திருக்குடந்தைத் திவ்விய தேசம் ஜ்வலிக்கிறது. இந்த ஊரில் உள்ள ஸ்ரீ சக்கரபாணிசுவாமி கோயிலின் அருகேஉள்ள சக்கரப் படித்துறை என்ற காவிரிப் படித்துறைக்கு ஒரு சிறப்பும் உண்டு என்பர். இத்தலத்துக்கு அருகே, புள்ளம்பூதங்குடிக்கு அருகில் தொண்டரடிப்பொடியாழ்வாரின் அவதார க்ஷேத்திரமான திருமண்டங்குடி என்ற ஊரும் உள்ளது. இத்தலத்து அமுதன் சந்நிதியில் நடக்கும் திருவிழாக்களில் பதினைந்தாம் ஸேவையும், கலியன் திருவடி தொழுதலும், சைத்திரோத்ஸவமும், ஸ்ரீ சார்ங்க ராஜன் ஸ்ரீ லக்ஷ்மீநாரயணசுவாமி என்ற பரமபக்தனுக்கு ஐப்பசி அமாவாசை அன்று நடத்தும் திருவத்யயனமும் (சிராத்தம் செய்வது) மிகவும் முக்கியமானவை. இத்தலத்துப் பெருமாள் சந்நிதியின் இருபக்கங்களிலும் தக்ஷிணாயன – உத்தராயண தேவதைகள் படிக்கட்டுக்களாக அமைந்து பாகவதர்களின் திருவடி ஸ்பர்சத்துடன் பெருமாளின் திருப்பவளச் செவ்வாய் காணத் தவம் செய்தனவாம். அதனால் இத்தலத்தில் தக்ஷிணயண காலங்களில் (ஆடி முதல் மார்கழி முடிய) இறந்த எறும்பு முதலான யாவருக்கும் மோக்ஷப் பேறு கைகூடும் எனவும் புராணம் கூறும் இத்தலத்து நாச்சியாரான ஸ்ரீ கோமளவல்லித் தாயார், அருள் வடிவாய்க் கண்கண்ட தெய்வமாய் விளங்குவதால், ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பக்தர்கள் பெருங்கூட்டமாக வந்து இப் பெரிய பிராட்டியாரை ஸேவித்து நலம் பெறுகிறார்கள்.

இவ்வாறு பலவாற்றாலும் சிறப்புப் பெற்ற பாஸ்கரக்ஷேத்திரம் என்ற இத்தலத்துக்குப் பாக்கியம் பெற்ற அனைவரும் ஒருமுறை யாவது வந்து நம்மப்பன் ஸ்ரீ ஆராவமுதாழ்வானையும்,

ஸ்ரீ சார்ங்கராஜனையும், தாயாரையும் ஸேவித்து இம்மை மறுமை இன்பம் பெறப் ப்ராப்தம்-என்று சுருக்கமாக இத்துடன் இத்தலத்தின் பெருமை விளக்கத்தை முடிப்போம். விளக்கிக்கூற நிலைகளமாகா.

## பெருமாள் தனிப்பெருமை

இந்த அமுதனது திவ்விய ஸந்நிதியில் திவ்விய அமுதவெள்ளம் தோய்ந்து இறுகி உருக்கொண்டதோ என்னும்படியாய் உத்தான சயனத்தில் பொங்கு படமூக்கின் ஆயிரவாய்ப் பாம்பணை மேல் சேர்ந்த அமுதனது அருள் ஒளி வீசும் திவ்விய மங்கள விக்ரஹமும், இவருக்கு முன்பு எடுப்புடன் பரமபத பாரிஜாத மரம் நான்கு கிளைகளுடன் பணைத்தாற்போன்று நான்கு தோள்களுடன் மிடுக்குடன் நின்ற திருக்கோலத்தில் ஸேவைதந்து.

"கடல்கடைந் தமுதம் கொண்டு கலசத்தை நிறைத்தாற் போல்
உடல் உருகிவாய் திறந்துமடுத்து உன்னை நிறைத்துக்கொண்டேன்
கொடுமை செய்யும் கூற்றமும்என் கோலாடி குறுக்கப்பெரு
தடவரைத்தோள் சக்கரபாணி சார்ங்கவிற் சேவகனே"

என்றும்,

அரியேறே யென்னம் பொற்சுடரே செங்கண் கருமுகிலே
எரியேபவளக் குன்றே நால்தோள் எந்தாய் உனதருளே
பிரியாவடிமை என்னைக் கொண்டாய் குடந்தைத் திருமாலே
தரியேன்இனி உன்சரணம் தந்துஎன் சன்மங் களையாயே

என்றும் ஆழ்வார் அருளிச் செயல்களைக் கொண்டு ஆடிப்பாடி அகமகிழ்ந்து மங்களாசாஸனம் செய்யும்படியாயும் உள்ள உத்ஸவரும் நம்மிதயம் புகுந்து ஸேவை தருவார்கள். மூலவர் திருமுகத்தில் அருள் ஒளியும், உத்ஸவர் திருமுகத்தில் மோகனப் புன்னகையும் நம் கண்களுக்கோர் மீளா இன்பம் தரும்! "ஆடரம் பூண்டு ஒரு நான்கு தோளும் அச்சோ ஒருவர் அழகியவா" என்றும், நமக்கும் கலியன் அருளிச் செயலை திருநாவில் உச்சரித்துக் குதித்துக் களிக்கத்தான் வேண்டிவரும்! பிறந்து பயன் பெறவும், இருந்து நலம் பெறவும் ஒருமுறை நம் அமுதனையும் ஸ்ரீ சார்ங்கராஜனையும் ஸேவிப்பவர்கள் பெற்றதாயின் குடல் செய்தவர்களாவார்கள். இந்த அமுதவெள்ளலை ஆழ்வார்கள் அனுபவிக்கும்படி மிகவும் கடினமானது. பொதுவாக அந்த அந்தத் திவ்ய தேசத்து எம்பெருமான்களை ஆழ்வார்கள் மங்களா

சாஸனம் செய்யும்பொழுது அந்த அந்தப் பெருமாளையே பற்றிய அருளிச் செயல் சுறக்க அனுபவிப்பது வழக்கம். ஆனால் இத் தலத்துப் பாசுரங்கொண்ட ஆழ்வார்களில் நம்மாழ்வாரும் கலியனும், "பசியன் கோடையில் புசிக்கும் பொழுது இடை இடையே விசிறி விடாய் அகற்றிக் கொள்வது" போல் அந்த அந்த எம்பெருமாள்களின் அனுபவக் கடலில் ஆழங்கால்பட்டு கரைசேற வொண்ணமல் அகவாயில் கொப்பளித்துக் தவிக்கும் பொழுது, தப்பிக் கரையேற ஒரு மரக்கலம் கிடைத்தது போல் நம் அமுதனைத் தடவி அழைத்துவிடாய், அகற்றிக் கொள்வார்கள் இத்தகைய பரம அதிசய அனுபவத்தைச் சித்திரிக்கும் வகையில் இன்று பெருமாள் கருவறைப் புறச் சுவற்றில் செதுக்கப்பட்டுள்ள பெருமாள் பிம்பங்களைக் கண்டு சுவைக்கலாம். கலியனது பிரபந்தங்களில் 23 இடங்களுக்கு மேற்பட்ட இடங்களில் "அமுதனை" அழைத்துக் களைப்பாறும் அதிசயத்தை இந்த ஆழ்வாரின் அனுபவச் சுவடறிந்த பெரியார்கள் நினைத்து நினைத்து இன்புறுவார்கள். பல இடங்கள் காட்டலாமாயினும் கலியனது ஒரு அனுபவத்தை மட்டும் ஆழ்வாரின் சிறப்பினைக் காட்டும் வகையில் தெரிவிப்போம்:-

திருமங்கை ஆழ்வார் - தமது அவதார க்ஷேத்திராதீசனை வயலாலி மணவாளன்பால் பக்திக்காதல் கரைபுரண்டோடப் பெண்தன்மை எய்திக் கையறு நிலையில் நின்று பரகாலநாயகி என்ற பெயரில் அவனது பிரிவு தாங்காது வாய்வெதைத்து, உள்ளம் உருகி, நா உலரத் தவிக்கும்பொழுது, தந்நிலையை எப்படியாவது ஆற்றிக்கொள்ள நினைந்து தூதுவிடத் துணிந்தாள். அவ்வாறு தூதுவிடத் துணிந்த பதிகமே "பெரிய திருமொழி-(3-6) ஆகும். இப்பதிகத்தில் தூதுவிடும் வாயிலாக நான்கு பாசுரங்கள் அருளிச்செய்ததுமே வயலாலி மணவாளனது பெருங் காதல் பரகாலநாயகியை அகம்புரளச் செய்ய ஆற்றாது, அலமந்து தவிக்க இவ்வனுபவச் சுழலிலிருந்து மீள நினைத்துத் தம் சொந்தப்பெருமாளான திருக்குடந்தை அமுதனை 5வது பாசுரத்திலே கூவி அழைக்கும் அழகை உள்ளம் கொண்டுணர வேண்டும்! அந்தப் பாசுரம் இதுவே. என்ன தமிழ்! எத்தகைச் சுவை!! எம்முறை எளிமை!!!

**வாளாய கண்பனிப்ப மென்முலைகள் பொன்னரும்ப**
**நாள் நாளும் நின்னினைந்து நைவேற்கு, ஓமண் அளந்த**
**தாளாளா! தண்குடந்தை நகராளா! வரைஎடுத்த**
**தோளாளா! என் தனக்கோர் துணையாளன் ஆகாயே!-**

என்பது இவ்வருளிச்செயல்.

சதிர்பச்சையைக் கசக்கினால் போல் இப்பாசுரத்தின் இன் சுவையை உணர்ந்து மேலும் சுவைக்கச் சுவைக்கப் பல இன்பச் சுவை மிளிரும் இத்துடன் இதனை முடிப்போம்.

அடுத்து குருக்களுக்குத் திலதமாகும் செல்வக்கோனை நம் குருகைநகர் முனிவன் வாழ்தொல்புகழார் குடந்தைக் கிடந்தானை மங்களாசாஸனம் செய்யப் புகுந்து கண்களாரளவுங் கண்டு, தொழுது தொழுது தோத்திரங்கள் பாடும் அளவில் முதல் எடுப்பில் பிரதம தரிசனம் ஏற்பட்டதுமே, "எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டு ஊழி ஊழிதோறும் அப்பொழுதைக்கப்பொழுது என் ஆராவமுதமே" என்று பார்த்து அனுபவிக்கும்படியாய் விளங்கும் அமுதனின் ஸமுதாய சோபையின் அனுபவித்தில் ஈடுபட்டு "ஆராவமுதே" என்று அழைத்து, உடனே "அடியேன் என்று சேஷத்வமாகிய ஜீவாத்மாவின் ஸ்வருப நிருபக தலையாய தர்மத்தை வெளியிட்டார். இவ்வாறு மேன்மேலும் இவ்வெம் பெருமான் போக்யதையிலீடுபட்டுப் பல பாசுரங்களால் அனுபவித்தும், அடைபவனும், அடைவிப்பனும் அவனே என நமக்குக் காட்டிக்கொடுக்கக் "களைவாய் துன்பம் களையாது ஒழிவாய் களைகண் மற்றிலேன்" என்றும் "உன்னால் அல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்" என்றெல்லாம் நம்மாழ்வாரின் அளப்பரியா அனுபவவெள்ளம் பள்ளமடைபாய் கிறது. "அமுதன்" என்று இவரை அழையாமல் "அமுது" என்று அழைத்து அமுதமாகவே ஆழ்வார் இவரை அனுப விப்பதும், இந்தப் பதிகத்தின் "தாத்பர்ய ரத்னாவளி"ச் செய்யுளில் ஸ்ரீ தேசிகன் "நிஸ்ஸௌஹித்யாம்ருதத்தவாத்" என அப்படியே மொழிபெயர்த்து அருளியதும் இவ்வெம் பெருமானின் பெரும் சிறப்புக்குப் பொன் முத்திரையாயிற்று. அல்லாத மற்ற திவ்வியதேசத்து எம்பெருமான்களைவிட இத் திருக்குடந்தை எம்பெருமானிடமே நம்மாழ்வாருக்கு ஒரு தனி ஈடுபாடு என்பதை ஆழ்வாரின் அனுபவ ப்ரகாரத்தை அறிந்த வர்கள் பணிப்பர். ஓர் இடம் மட்டும் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். திருக்குருகூரில், ஆழ்வார் யோகநிலை எய்தி பத்மாஸனத்தில் திருப்புளியாழ்வாருக்குக் கீழே எழுந்தருளி யிருந்தே பகவதனுபவம் பண்ணினரே அன்றி, ஒரு திவ்விய தேசத்திற்காவது திருமங்கை மன்னன்போல், திருவடி கொண்டு நடந்தேறி மங்களாசாஸனம் பண்ணியதாகத் தெரியவில்லை. அதனால்தான்போலும் ஆழ்வாருடைய அருளிச்செயல் பரிசு பெறவே 107 திவ்ய தேசத்து எம்பெருமான்களும், ஆழ்வார் அமர்ந்திருந்த புளியமரத்தின் கிளைகளில் அந்தந்த அர்ச்சாவதாரத்

திருமேனியுடன் காத்திருந்தார்கள். ஆனல் அவர்களுள் ஆழ்வார் அருளிச்செயல் பரிசுபெற்றவர்கள் சுமார் 34 பேர்களாவார்கள். "ஆராவமுதன்" மட்டும் அங்கு எழுந்தருளாமல் வாளாவிருந்து விட்டார்போலும். தர்மனத்திற்கினிய ஆராவமுதன் எழுந் தருளவில்லையே என்ற ஆர்த்தியும், அலமாப்பும் ஆழ்வாருக்கு ஏற்படவே "அசைவில் உலகம் பரவக்கிடந்தாய் காணவாராயே" என்று மிடற்றோசை எழுப்பி வேண்டிக் கொண்டார்போலும், என்றெல்லாம் அனுபவ வித்தகர்கள் விரித்துரைக்கும்பொழுது அனுபவிக்கும் நம் நெஞ்சு இடிந்துகும்; கண்பணிக்கும்; தம் அமுதன்பால் ஆழ்வாருக்கு அந்தோ எத்தகைய ஈடுபாடு என்று நம் உள்ளம் துள்ளும். இவ்வடியில் வரும் "அசைவில்" என்று சொல்லுக்கு இரு பொருள்கூறிச் சொல்நயம் அனுபவிப்பார்கள். உடனே பக்தபராதீனனை அமுதன் ஆழ்வார் முன் திவ்விய தரிசனம் தந்தார் போலும். அவ்வெம்பெருமானைக் கண்டதும் அருளிச்செயல் அமுதம் கிளைபாய்ந்து ஓடியது. அப்பாசுரம் இதுவே.

**வாராவருவாய் வரும் என் மாயா மாயா மூர்த்தியாய்**
**ஆராவமுதாய் அடியேன் ஆவி அகமே தித்திப்பாய்**
**தீராவினைகள் தீர என்னை ஆண்டாய் திருக்குடந்தை**
**ஊரா, உனக்காட்பட்டும் அடியேன் இன்னம் உழல்வேனே?**

என, அமுதன் பெருமைக்கு முத்தாப்பு வைத்தது போன்ற மற்றோர் பெரும் சிறப்பை ஆழ்வாரின் சரமப் பிரபந்தமான திருவாய் மொழியின் "சூழ்விசும்பணி முகில்" பதிகத்தின் ஏழாம் பாசுரத்தில் நாம் காண்கிறோம்.

ஆழ்வார் இவ்வருள் தருமாஞாலத்தினின்றும், தமது அவதார காரியத்தை முடித்து விட்டு பெரும் த்வரையுடன் வைகுந்த மாநகரம் புகுகிறார். அத் திருநாட்டில் தமக்கு நடக்கும் வரவேற்பு வைபவத்தை எல்லாம் நமக்காக எடுத்து அருளிச் செய்யும் பொழுது வைகுந்தத்தமர்களான அமானவர்களின் திரளும் எதிர்கொண்டழைக்கவும், "குடந்தை எங் கோவலன்குடி அடியார்" என்று மடந்தையரும் வாழ்த்துகிறார்களாம். மருதரும், வசுக்களும் துதி பாடுகின்றனராம். இந் நிகழ்ச்சியை எடுத்துக் காட்டும் முகத்தால் தமக்கு அமுதனிடம் உள்ள சிறப்பான ஈடுபாட்டையும் அமுதனிடம் ஈடுபட்டப் பிரபன்னர்களுக்கு அத் திருநாட்டில் ஏற்படும் தனிச் சிறப்பையும் எடுத்தருளினர். இப் பாசுரத்தால் திருக்குடந்தையின் பெருமை திருநாட்டிலும் பரவி இருக்கும் பான்மையை பொய்யில் புலவர் நம்மாழ்வார் எடுத்துக்

காட்டினார். சாந்தோக்கிய உபநிஷதத்தில் "ஏததம்ருதம்" என்று பிர்மம் அம்ருதமாகவே ஓதப்பட்டது. "ஏததேவாம்ருதம் த்ருஷ்ட்வா த்ருப்யந்தி" என்றும் ஓதப்பட்டது. இந்தச் சுருதிவாக்கியத்தின் நேர் மொழிபெயர்ப்பு போல் அமைந்தே "என் அமுதனைக் கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்ற திருப்பாணாழ்வார் ஸ்ரீ சூக்தி எழுந்தது எனலாம். இந்த "ஆராவமுதே" திருவாய் மொழியில் நம் பூருவர்கள் மிகவும் ஈடுபட்டிருப்பர்-இங்குவரும் "ஈட்டில்" நம்பிள்ளை அருளிச் செய்வதாவது :-

"உத்தர பூமியிலே லோக ஸாரங்க மஹாமுனிகள் வர்த்தியா நிற்க, இங்குத் தையான் ஒருவன் அங்கு ஏறச் செல்ல, "பிள்ளாய்! தக்ஷிண பூமியில் விசேஷமென்" என்று கேட்க திருவாய்மொழி என்று ஒரு பிரபந்தம் அவதரித்து, சிஷ்டர்கள் பரிக்ரஹித்துப் போரக் கொண்டாடிக்கொடு போரா நின்றார்கள். என்ன "அதிலே உனக்குப் போவது ஒரு சந்தை சொல்லிக் காணாய்" என்ன "ஆராவமுதே" என்கிற இத்தனையும் எனக்குப் போம்" என்ன நாராயணாதி நாமங்கள் கிடக்க இங்ஙனே ஒருநிர்த்தேசம் உண்டாவதே! இச்சொல் நடையாடுகிற தேசத்து ஏறப்போவோம் "என்று அப்போதே புறப்பட்டுப் போந்தார்" என்பது.

அமுதன் பள்ளிகொண்டிருக்கும் அழகினை அதே பதிகத்தில் ஈடு குறிப்பிடுவதாவது "........அங்ஙனின்றிக்கே கிடந்த கிடைக்கைக்கு ஆலத்தி வழிக்க வேண்டும்படி இருக்கை. இவன் உணரில் செய்வது என்? என்று வயிறு பிடிக்க வேண்டும்படி இருக்கை" என. இப்புடையில் ப்ரபந்நஜன கூடஸ்தரான நம்மாழ்வாரின் அனுபவம் அமுதன் விஷயத்தில் பெருக்காறு எடுத்துப் பெருகும். திருமழிசை ஆழ்வாருடைய அனுபவமோ அமுதனைக் கண்ணனாகவே கருத்தாறக் கருதி அப்ரமேயமாக விளங்கும்

"குடந்தைமேய கோவலா" என அமுதனுக்கும் "விற்குனித்த விற்கை வீரனே" ஸ்ரீ சார்ங்கபாணிக்கும் தனித்தனியே அருளிச் செயல் காப்பிட்டார்.

வாமன புராணத்தில்

**தேவம் சார்ங்க தரம்விஷ்ணும்யே ப்ரந்நா:**
**ப்ராயணம் நதேஷாம் யமஸாலோக்யம் நச்தேநர**
**கௌகஸ:**

என்று கூறப்பட்டுள்ளது. எவன் திருக்குடந்தை ஸ்ரீ சார்ங்க ராஜனைத் தஞ்சம்புகுந்து நிற்கிருனே அவனுக்கு யமவாதனையும் நரகமும் கிடையாது என இச்செய்யுளின் பொருளாகும்.

திருமழிசை ஆழ்வாரின் "சாலிவேலிப்" பாசுரத்திற்கு உரையிட்ட பெரியவாச்சான் பிள்ளை அருளுவதாவது :- "அழகாலும், சீலத்தாலும் ஆச்ரிதரை எழுதிக்கொள்ளுகைக்காக அவதரித்த கிருஷ்ணன் பிற்பாடடுடைய இழவு தீர, ஸர்வப்ரகாரத்தாலும் புஷ்கலமான திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளகிற படியை அனுபவிக்கிருர்" என பெரியாழ்வாரோ அமுதனே கண்ணன் என்று கொண்டு. அக்குழந்தைக்குக் கண்ணனுக்கு ஒரு சிறு "பிள்ளைத் தமிழ்" பாடி, "குடந்தைக் கிடந்தானே தாலேலோ" எனத் தாலாட்டி, "குடந்தைக் கிடந்தானே கொட்டாய் சப்பாணி" என்று சாப்பணி கொட்டுவித்தும், இந்த முறையில் பரமானந்தபரிதராய் அமுதனை அனுபவிப்பன். இறைவனைக் காணும் இதயத்து இருள்கெட, ஞானம் என்னும் விளக்கு ஏற்றிய பூதத்தாழ்வாரோ "எங்கள் பெருமான்" என விளித்து "படமுக்கின் ஆயிரவாய்ப்பாம்பணை மேல் சேர்ந்தாய் குடமுக்கில் கோயிலாக் கொண்டு" என அனுபவிப்பார். மன்னியபேர் இருள் மாண்டபின், கோவிலுள் மாமலராள் தன்னெடு மாயனைக்கண்டமை காட்டும் தமிழ்த் தலைவனை பேயாழ்வாரும் "சேர்ந்த திருமால் கடல் குடந்தை" என அனுபவிப்பர். சூடிக் கொடுத்த நாச்சியாரும் கண்ணனையே கண்ணுறக்கண்டு முசித்துத் தழுவிக்க சிந்து அனுபவிக்கவேண்டும் என ஆவிகாத்திருந்தவராய் அவனது பிரிவின் பிரிவால், துயரம் தாங்கமாட்டாது "அவ்வெம் பெருமானது சம்பந்தப்பட்ட ஏதொரு பொருளையாவது என் மேனியில் இட்டு என் உயிரைக் காப்பீர்காள்" என அலற்றி அமுதமொழி பொழியும். நாச்சியார் திருவாய்மொழி 13ம் பதிகத்தில் "கோலால் நிரைமேய்த்து ஆயனாய்க் குடந்தை கிடந்த குடமாடி, நீலார் தண்ணம் துழாய் கொண்டு என்னெறி மென் குழல்மேல் சூட்டீரே" என்றும் "ஆராவமுதமனையான்றன் அமுதவாயில் ஊறிய நீர் தான் கொணர்ந்து புலராமே பருக் கிளைப்பை நீக்கீரே" என்றெல்லாம் அலற்றிநின்றுர். இவ்வாறு இந்த ஏழு ஆழ்வார்களும் நம் அமுதனிடன், ஈடுபட்டு அகம் குழையப் பாசுரம் இட்டு மெய்ம்றந்து இருந்த வைபவ மஹா ஸமுத்திரத்தில், சிறிய ஞானத்தனை அடியேன் பெரியோர்களின் கருத்தில் ஒரு சிறு திவலையைக் காட்டியபடி விரும்புவேன் ஞான நிதிகளான பெரியோர்களை அடிபணிந்து. மேலும் கொள்ளமாளா இன்பவெள்ளமான அமுதன் அனுபவத்தைச் சுவைத்துச் செவி

மந்துக் கேட்டு இன்புறலாம் சாரீரக சாஸ்த்திரத்தில் "பரம புருஷார்த்தமான காரணப்பொருளில், வேதாந்த வாக்கியங்கள் எல்லாம் தாத்பர்யேண ஸமந்விதங்கள்" என்று ஸமந்வயம் செய்வது போல் இங்கே அமுதனை மங்களாசாஸனம் செய்திருக்கும் ஆழ்வார்கள் அனைவரின் ஸ்ரீஸூக்திக்கும் அமுதனிடம் தான் நோக்கு எனச் சில பெரியோர் பணிப்பதுண்டு. இதனை' 'நஹிநிந்தாந்யாயேன்" ஏற்பதில் பிசகில்லை.

## திருவெழுகூற்றிருக்கை

மற்றை திவ்விய தேசங்களுக்கு இல்லாப் பெருஞ் சிறப்பாய் நாலுகவிப் பெருமாளான திருமங்கை ஆழ்வார் இத்தலத்துத் தேருக்கென ஒரு தனிப் பிரபந்தம் அருளிச்செய்தார். அதற்குத் "திருவெழுகூற்றிருக்கை" எனப் பெயர். அது முக்கியமாக இத்தலத்தைப்பற்றிய பிரபந்தமானதால் அதன் பெருமையைச் சிறிதளவாவது பொதுமக்கள் அறியவேண்டும் என்பதினுல் மிகவும் சுருக்கமாக ஈண்டு அதைப்பற்றி எழுதுகிறோம். திருமங்கை மன்னன் அருளிச்செய்த ஆறு பிரபந்தங்களில் ஒன்றாய் "இயற்பா" என்ற மூன்ருவது ஆயிரத்தில் எட்டாவதாகக் கணக்கிடப்பட்ட பிரபந்தமே "திருவெழு கூற்றிருக்கையாகும்." எவ்வேழு கூருய் மேலும் கீழும் அமைந்த தேரில் எம்பெருமாள் இருக்கை எனப் பொருள்.

திருமங்கை ஆழ்வார் தமிழ்க் கவிகளில் தலையானவர். ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரம் என்ற வகையில் நான்கு விதமான கவிதை இயற்றுவதிலும் தலைசிறந்தவர். இவைகளுள், "சித்திர கவியாவது": "ஏகபாதமும், எழுகூற்றிருக்கையும் காதைக் கரப்பும், கரந்துறைக் செய்யுளும், கூடச்சதுக்கமும், கோமூத் திரியும் இவை முதலாவன சித்திரக்கவியே" எனத் தமிழிலக்கண நூல்கள் கூறும். அவ்வகைகளில் எழுகூற்றிருக்கையும் சித்திர கவிகளிற் சேர்ந்தது.

"சக்கரபந்தம்" "பத்மபந்தம்" என வடமொழிப் புலவர்கள் செய்யுள் கவனம் செய்வதுபோல், தமிழர்களும் கவனம் செய்வதுண்டு. "எழுகூற்றிருக்கை" என்னும் நூல் "ரதம்" (அதாவது தேர்) பந்தத்தில் எழுதப்பட்டது. இதனையாக்கும் முறை: தேரின் உருவம் தோன்றக் கட்டங்கள் போட்டு அவற்றில் எண் முறையே பாசுரப் பகுதிகளை அடக்குவதாகும். தேருக்குள் பெருமாள் எழுந்தருளியிருக்கும் நடுப்பகுதிக்கு மேலும் கீழும் ஏழு

பாகங்கள் (கூறுகள்) உண்டு. அப்படிக் கூறுகள் அமைத்து எழுதும்பொழுது முதலில் மூன்று அறைகளும் மேன்மேலும் இரண்டு இரண்டு அறைகள் மிக ஆறும் ஏழும் கூறுகள் அமைந்ததாய் பதின்மூன்றறைகள் கொண்டதாய் சொற்களை அமைக்கவேண்டும் என்பர்.

"வீரசோழியம்" முதலிய இலக்கண நூல்களில் இதன் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இத்திவ்வியப்பிரபந்தத்தில் "ஒரு பேருந்தி" என்று தொடங்கி, "இருவகைப் பயனாய் ஒன்றாய் விரிந்து நின்றனை" என்னுமளவே அறைகளில் அடைக்கத்தக்கவை. அதற்குமேல், "குன்றாமது மலர்ச்சோலை" என்று தொடங்கியுள்ளவை துதிஸமாப்தி. அப்பகுதியை வேண்டும் என்றால் தேரின் நடுப்பகுதியில் அமைத்துக் கொள்ளலாம் என்றெலாம் பெரியோர் கூறுவர். இத் திவ்வியப் பிரபந்தம் 46 அடிகளினால் அமைந்த ஒரு "ஆசிரியப்பா" வாகும்-இதுபோல் ஸ்ரீவைணவத்தில் "திருக் குருகைப் பெருமாள் கவிராயர்" என்பவர், நம்மாழ்வார் விஷயமான மாறன் அலங்காரம் என்னும் நூலில் ஒரு எழு கூற்றிருக்கையையும் சைவசமயத்தில் புகழ்பெற்ற "திருஞான சம்பந்தரும், நக்கீரர்" என்பவரும் இரு எழுகூற்றிருக்கை ரதபந்தப் பாசுரம் இயற்றியுள்ளனர். இவ்வாறு நம் அமுதன் பெருமை கரை தட்டாக் காவிரி என விரிந்து, பாகவதர்களின் திருவுள்ளங்களில் நிலை மண்டியுள்ளது. நம் அமுதனைப்பற்றிக் "கம்பரும்" அருமையாக ஒரு பாடல் இட்டதாகத் தனிப்பாடலில் வரும். அதாவது :-

**இடம்கொண்ட நெஞ்சத்து இணங்கிக் கிடப்பன என்றும் பொன்னித்**
**தடம்கொண்ட தாமரைசூடும் மலர்ந்ததண் பூங்குடந்தை**
**விடங்கொண்ட வெண்பல் கருத்துத் திசெங்கண் தழலுமிழ்வாய்**
**படங்கொண்ட பாம்பணைப் பள்ளி கொண்டான் திருப்பாதங்களே**

## முடிவுரை

காவலிடப்படாத நிரங்குசமான சுதந்தரமுள்ள பரமபுருஷனது திவ்ய ஸங்கல்ப விசேஷத்தால் ஏற்படும் பேர் அருள் பெருமழை வென இன்னார் இனியர் எனப் பாவியாது பொழியும் என்பதற்கு அல்பனான அடியேனே இன்று எடுத்துக் காட்டாக அமைந் துள்ளேன். அன்று ஸ்ரீ ராகவன் குகன்பாலும், கண்ணன் ததிபாண்டன்பாலும் காட்டிய கருணைக்குக் காரணம் இல்லை. ஆனால் பெருமாள் தண்ணளியே காரணம் என்றபடிக்கு

அடியேனுக்கு ஈண்டு நம் ஸ்ரீ ஆராவமுதன் – ஸ்ரீ கோமளவல்லி நாச்சியார் இவர்களின் பெருங்கருணையே அசட்டுப்பிள்ளையிடம் பெற்றோர்களுக்குப் போல ஏற்பட்டது. அதனால்தான் அப்பரம் பொருளின் பெருமை யாவையும் சுவைத்தறிந்த பெரும் புலவர்கள் பலர் இருக்க, நிறை வொன்றுமில்லா இச் சிறியோனுக்கு எம் பெருமாள் தன்பெருமையை எடுத்து எழுதும் இப் பேற்றை அளித்தான். அவ்வண்ணலுக்கு அகிஞ்சனனை அடியேன் எதை சமர்ப்பித்து நேர்த்திக் கடனிடுவது! உள்ளதொரு கள்ளமனத்தையே சமர்ப்பித்து அஞ்சலிசெய்கிறேன். இத்தகையதொரு வாய்ப்பை அடியேனுக்கு அளித்தவகையில் பலருக்கும் அடியேன் நன்றி செலுத்தக் கடப்பாடுள்ளவன். இருப்பினும் உதவும் பேர் உள்ளம் கொண்ட சிலர் பெயரையாவது குறிப்பிடாதிருத்தல் தகுதிஅன்று என்று சிலரைக் குறிப்பிடுகிறேன்.

முதன் முதலில் வெகுநாட்களாகத் தனித்ததொரு சிறு தல விளக்கம் இவ்வெம்பெருமானுக்கு ஏற்படவேண்டும் என்று நினைத்து இப்பணியைப் பூசலுக்கு இடம்கொடாது, பொதுமக்கள் அறிய ஒரு சிறு நூலை எழுத ஆணையிட்ட அடியேனது மதிப்பு மிக்க அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு. கே. எஸ் நரசிம்மன் பி. ஏ., பி. எல்., ஐ. ஏ., எஸ். அவர்களுக்கும், அவ்வப் பொழுது "குன்றும் விளக்கைக் குச்சியிட்டு நுந்துவது" போல் அடியேன் ஆர்வத்தைப் பெருக்கவைத்து, இவ்வெம்பெருமான் தல பெருமை எப்படியாவது வெளிவரவேண்டும் என்று கொண்டு ஊக்கமளித்த முன்பு இருந்த துணை ஆணையர்களுக்கும் சிறப்பாக இன்றையத் தஞ்சைமாவட்டத் துணை ஆணையர் திரு. வி. எஸ். கோதண்டபாணி, B. Sc., B. L. அவர்களுக்கும், எனது பணிவான வணக்கம். மற்றும் மிகுந்த உத்ஸாஹத்துடன் எழுதுவதற்கு வேண்டிய ஆதரமாய் உள்ள நூல்கள் சிலவற்றையும் தந்து உதவிய முந்தைய இறை பணியாளர் திரு. தியாகராஜன் அவர்களுக்கும், தனிச்சிறப்பாக அடியேன் என்றும் மறக்கமுடியாதவாறு, எழுதி முடித்து இரண்டு ஆண்டுகளாயும் வெளிவராமல் இருந்த இந் நூலை எப்படியும் வெளிக்கொண்டுவரவேண்டும் என்று உறுதி கொண்டு அடியேனுக்கு அன்பு ஆணையிட்டு இந்நூலை அச்சிட ஆர்வத்துடன் முன்வந்து எல்லாவற்றாலும் உதவிய இன்றைய இறைபணியாளர் திரு. M. செல்லபெருமாள் B. Com., F. S. A. A. (India) அவர்களுக்கும் மற்றும் ஆலய அலுவலகத்தார்கள் அனைவருக்கும் கைம்மாறு காணக் கடமைப்பாடுடையேன் ஆவேன் என்று கூறிப் பணிவு கலந்த நன்றியுரையை இடுகிறேன்,

*"நூன்முகத்தில்" மட்டுமே, படித்தறிந்த ஸ்ரீ வைஷ்ணவ் மகான்களுக்குத் திருச்செவியாறச் சில கருத்துக்களைக் கூறி நிறம் பெறவே அமுதனைப் பற்றிய ஆழ்வார்களின் அனுபவத்தைப் பற்றி எழுதியுள்ளேன் :- பெரியோர்களுக்கு மிகவும் பணிவான ஒரு விண்ணப்பம் :- சிறியேன் எழுதிய இந்நூல் சொற்களிலும், கருத்துக்களிலும் கையாண்ட முறையாலும் பிழை இருக்குமானால் அதனைக் காணக் கண்கொண்டு திருவுள்ளம் பற்றி க்ஷமித்தருள வேண்டும். உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?*

**"காவியை வென்ற கண்ணார் கலவியே கருதிநாளும்**
**பாவியேனாக எண்ணி யதனுள்ளே பழுத்தொழிந்தேன்**
**தூவி சேரன்ன மன்னும் சூழ்புனல் குடந்தையானை**
**பாவியேன் பாவியாது பாவியேன் ஆயினேனே"**

**(திருக்குறுந் தாண்டகம் 14)**

**ஸஹ்யாத்ரிஜா ஸரஸ தீரக்ருதாதிவாஸ,**
**ஸந்தப்ததீனஜனமானஸ பூர்ணசந்த்ர, |**
**ஸாமோத கோமள லதாஸஹகாரவ்ருக்ஷ,**
**ஸ்ரீ சார்ங்கராஜ பகவந் சரணம் த்வமேவ ||**

**(அமுதனடியார் திருவடித்துள்)**

*1845. மேலவீதி*
*தஞ்சை*
*16—2—73*

**தஞ்சை**
**என். எஸ். தாதாசாரியன்**

ஸ்ரீ:

ஆராவமுதாழ்வான் திருவடிகளே சரணம்

# அணிந்துரை

"குறியும் – நெறியும்" என்றதொரு தமிழ் வழக்குண்டு. "குறி" என்ற சொல் அடைய வேண்டியதையும், "நெறி" என்ற சொல் அதனைப்பற்ற ஏற்பதொரு வழியையும் குறிக்கும். சமயவழக்கில், சிறப்பாக ஸ்ரீ வைணவ சமயத்தில் "குறி" என்பது திருமாலுலகம் புகுவதையும், அங்குச் சென்று அவர் திருவடியில் குற்றேவல் செய்வதையும் உணர்த்தும். நெறி என்பது அப்பேரின்ப நிலையை அடைவதற்குப் பற்றுகப் பாங்குற உரைக்கப்பட்ட "சரணாகதி" என்ற நெறியை உணர்த்தும். இதனைத் தஞ்சப்பரகதி என்ற சொல்லாலும் அழைப்பார்கள். இவ்வழியே மற்றைய வழிகளைவிட எளிதானது என்றும் உடனே பயன் தரவல்லது என்றும் வேதாந்த நூல்களிலும், பின் வந்த அறநூல்களிலும் அணிந்து கூறப்பட்டதாயினும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலேதான் இம்முறைக்கு ஆக்கமும், ஊக்கமும் உருப் பெற்றன என்பார்கள். இக்கருத்தை நம்மாழ்வார் திருக்குடந்தை ஆராவமுதாழ்வான் பதிகமான "ஆராவமுதே" (திருவாய்மொழி 5–8–11) பதிகத்தில். உழலை என்பின் பேய்ச்சி முலையூடு அவளை உயிர் உண்டான், கழல்களவையே சரணாகக் கொண்ட குருகூர்ச் சடகோபன்" என்று பாசுரப் பகுதியால் வெளியிட்டருளினர். அந்த நம்மாழ்வார் என்ன, அவர் தம் வழியில் வீறு நடை போட்ட திருமங்கை மன்னன் என்ன, மற்றும் பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் என்ற எழுவருக்கும் திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன்பால் அளவற்ற ஈடுபாடு. அமுதனை அகமகிழ்ந்து பாடியுள்ளார்கள். இந்தத் திருக்குடந்தைத் திருப்பதி ஸ்ரீ வைணவ உலகிலும் மிகவும் புகழ்பெற்றது. எண்ணற்ற சிவத் தலங்களும், ஸ்ரீ வைஷ்ணவ ஆலயங்களும் நிறைந்த ஒரு பெரும் புண்ணிய க்ஷேத்திரம் இது.

திருமழிசை ஆழ்வார் இத்தலத்தில் அமுதனைக் கண்டு பேருவகை கொண்டு இங்கிருந்து வேறோர் இடம் செல்ல மனமின்றிப் பல ஆண்டுகள் இத்தலத்திலேயே யோகநிலை கொண்டார். அவருடைய பக்திக்கு மெச்சிய ஆராவமுதாழ்வான், சிலை வடிவத்திலிருந்தே எழுந்திருக்க வேண்டும் என ஆழ்வார் வேண்டிக்கொள்ள உடனே பக்தன் சொன்ன வண்ணம் செய்தார். இவ்வுண்மையை திருமழிசையார் வாக்கினாலேயே அறியலாம். நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் வழங்கொழிந்து மறைந்து இருக்கவே, பெருமாள் தமது பதிகமான "ஆராவமுதே" என்பதை மட்டும் மறையாமல் காத்துப் பிறகு அதனை ஸ்ரீமந்நாதமுனிகளின் திருச் செவி படச் செய்து, அவரைக்கொண்டே "நம்மாழ்வாரிடமிருந்து" நாலாயிரம் தமிழ்ப் பாசுரங்களையும் பெற்று அப்பாசுரங்களை நான்காக வகுக்கவைத்து, அவைகளுக்குத் தெய்வப்பண் இடச்செய்து என்றும் அழியாப் புவி எழுத்தாக்கி வைத்த கருணை அமுதனுடையதே என்பர்.

இத்தகைய மாபெரும் ஸ்ரீ வைணவத் தலத்துக்குத் தனியாக ஒரு தலவரலாறு நூல் இருக்குமானால் சாதாரண மக்களும் இத்தலத்தின் பெருமையை அறிந்து அமுதனை வணங்கி வழிபட்டு நன்னிலை எய்தலாம் என்ற கருத்துடன்பொதுமக்களும், பெரியோர்களும் அடிக்கடி விரும்பிக் கேட்டுவந்ததை ஒட்டி சுருக்கமான, குறைந்த விலையில் ஓர் நூல் எழுதவேண்டும் என்ற ஆர்வம் எங்கள் மதிப்புமிக்கத் தலைவர் ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் பி. ஏ., பி எல், ஐ ஏ. எஸ். அவர்களுக்கும் அடியேனுக்கும் இருந்தது. அப்பணியை விரைவில் நடத்த இக்கோயிலின் இறைபணியாளர், திரு. செல்லபெருமாள் அவர்களிடம் ஒருசமயம் கூறினேன். அவரும் மிகவும் ஆர்வத்துடன் இப்பணியைத் தக்கதொரு புலவரும், சமய நூல்களை நன்கு பயின்றவரும், சமயக் கருத்துக்களைப் பெரியோர்களிடம் வணங்கிக் கேட்டறிந்தவருமான பிரவசனபூஷணம் தஞ்சை. என். எஸ். தாதாசாரியர் அவர்களிடம் ஒப்படைத்து இந்த நூலைப் பொதுமக்களுக்கு இன்று வெளியிட்டு உதவுகிறார். சிறந்த எழுத்தாளரும், பேச்சாளரும் தமிழக அரசின் அறிஞர் குழுவின் கௌரவ அங்கத்தினருமான திரு. தாதாசாரியர் அவர்களும் அறிய வேண்டிய கருத்துக்களை மிகவும் சுருக்கமாகவும் தேவையுள்ள பகுதியை விடாமலும் எளிய தமிழ் நடையில் இந்நூலை எழுதித் தந்தமைபற்றி அன்னாரைப் பாராட்டுகின்றேன். இறைபணியாளர் அவர்களையும் பாராட்டுகின்றேன்,

இந்நூலின் "நூன்முகத்தில்" சமய வழியைப் பின்பற்றிய அரும் கருத்துக்களை ஆசிரியர் சுருக்கமாக எடுத்துரைத்ததற்கு சமயப் பேரறிஞர்களின் ஆசிக்கு அவர் உரியவராகவும் இருக்கிறார்.

பொதுமக்கள் இந்நூலைப் படித்து அதனடியாக ஸ்ரீ கோமளவல்லி நாச்சியார் - ஸ்ரீ சார்ங்கராஜனை வணங்கி வழிபட்டு அந்தத் திவ்விய தம்பதிகளின் அருளைப்பெறுவார்களாக.

வணக்கம்.

இங்ஙனம்,

**வி. சௌ. கோதண்டபாணி,**

துணை ஆணையர்,

அறநிலையப் பாதுகாப்புத்துறை, தஞ்சை.

தஞ்சாவூர்
18—2—1973

# பதிப்புரை

தமிழகத்தின் வரலாற்று களஞ்சியமாகவும் பண்டைய சிறப்பு சின்னமாகவும் விளங்கும் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் வரலாற்று சுவடி இருக்கவேண்டிய அவசியத்தை தமிழக அறநிலையத்துறை பெரிதும் விரும்பி பணித்தமைக்கிணங்க, வற்றாத வளங் கொழிக்கும் சோநாட்டில், தஞ்சை மாவட்டத்தின் குடந்தை பெருநகரில் அமைந்துள்ள அருள்மிகு சார்ங்கபாணிசுவாமி திருக்கோயிலின் தல வரலாற்றை வெளியிடுவதில் பெரிதும் மகிழ்வெய்துகிறோம்.

இவ்வரலாற்றை எழுதிய தஞ்சை பண்டித சிரோண்மணி திரு. **உ. வே. என். எஸ். தாதாச்சாரியார்** அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய தஞ்சை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, துணை ஆணையர், திரு. **வி. ஜௌ. கோதண்டபாணி B. Sc., B. L.** அவர் களுக்கும், இவ்வரலாற்றினை அச்சிட்டுத் தந்த வேதாரண்யம் குருகுல அச்சகத்தாருக்கும், மற்றும் இந்நூல் வெளிவர உதவியாய் இருந்த அனைவருக்கும் எங்களது நன்றி பெருக்கினை உரித்தாக்குகிறோம். அன்பர்கள் நூல்வழிசென்று பயன்பெறவேண்டுகிறோம்.

**இறைபணியாளர்.**

# பொருளடக்கம்


| எண். | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | திவ்வியதேசக் குறிப்பு | 2 |
| 2. | திருக்கோயில் விளக்கம் | 14 |
| 3. | திருக்குடந்தை (பழைய நகரம்) | 27 |
| 4. | பாஸ்கர க்ஷேத்திரம் | 28 |
| 5. | கலியாணபுரம் | 29 |
| 6. | ஸ்ரீ சார்ங்கராஜன் எழுந்தருளியது | 30 |
| 7. | ஸ்ரீ பாதாள ஸ்ரீநிவாஸன் | 32 |
| 8. | ஸ்ரீ லக்ஷ்மி நாராயணஸ்வாமி | 33 |
| 9. | பயன் | 34 |
| 10. | ஈடுபாடு | 35 |
| 11. | மங்களாசாஸனப் பாசுரங்கள் | 37 |

ஸ்ரீ:

ஸ்ரீ சார்ங்கராஜன் திருவடிகளே சரணம்

# திருக்குடந்தை ஸ்ரீ சார்ங்கபாணி சுவாமி

# தல வரலாறு

இற்பிறப்பு அறியீர் இவர் அவர் என்னீர்
    இன்னதோர் தன்மை என்று உணரீர்
கற்பகம் புலவர் களைகண் என்று உலகில்
    கண்டவா தொண்டரைப் பாடும்
சொற்பொ ருளானீர் சொல்லுகேன் வம்மின்
    சூழ்புனல் குடந்தையே தொழுமின்
நற்பொருள் காண்மின் பாடிநீர் உய்ம்மின்
    நாராயணா என்னும் நாமம்.

- திருமங்கை ஆழ்வார்.

## நூற்றெட்டுத் திருப்பதி அட்டவணையில் குறித்தபடி

[கும்பகோணம் (திருக்குடந்தை) ஸ்ரீ ஆராவமுது - கோமளவல்லீ - வைதிக விமானம் - ஹேமபுஷ்கரிணீ - கிழக்கே திருமுக மண்டலம்-உத்யோக சயனம்-ஹேமமஹர்ஷிக்குப் ப்ரத்யக்ஷம்- பெரியாழ்வார் - திருமழிசை ஆழ்வார் - திருமங்கை ஆழ்வார் - பூதத்தாழ்வார் - பேயாழ்வார் - ஆண்டாள் - நம்மாழ்வார்.]

ஸ்ரீ

# 1. தல குறிப்பு

## பெருமாள் திருநாமம்

**மூலவர்:-** ஸ்ரீ ஆராவமுது; ஸ்ரீ அபர்யாப்தாமிருதன் ஸ்ரீ ஆராவமுதன் ("குடமெடுத்தாடிய எந்தை" என்ற சொற்றொடரின் சுருக்கமே "குடந்தை" என்ற சொல் எனக்கொண்டு பெருமாள் திருநாமமும் குடந்தை என்று சிலர் சொல்லுவர்.)

**உத்ஸவர்:-** ஸ்ரீ சார்ங்கபாணி, ஸ்ரீ சார்ங்கராஜா, ஸ்ரீ சார்ங்கதரன், ஸ்ரீ சார்ங்கேசன்.

## நாச்சியார் திருநாமம்

ஸ்ரீ கோமளவல்லித் தாயார்.

## பெருமாள் தோற்றம்

**மூலவர்:-** இரு திருக்கைகளுடன், வலது திருக்கையைத் திருமுடியின்கீழ் அமர்த்தி, அழகு வெள்ளம் அலைகொள்ள, கிழக்கே திருமுக மண்டலத்துடன், உத்தான சயனத்தில்-பாம்பணை மீது பள்ளி கொண்டருளுகிறார்.

**உத்சவர்:-** நான்கு திருக்கைகளுடன், சக்கரம், சங்கு, கதை, சார்ங்கம் என்ற வில், உடைவாள் என்ற ஐந்து திவ்யாயுதங்களுடன், அபயம் அளிக்கும் திருக்கை முத்திரையுடன் நின்ற திருக்கோலம் பூண்டு குருமணித்திரளோ? இன்பப்பாவின் இன்சுவையோ? தேனோ? பைம்பொன் சுடரோ? திகட்டாத திண்ணமுதோ? என்னும்படி எங்கும் காணக்கிடைக்காத அழகு வடியும் திருமேனியுடன் தரிசனம் தந்தருளுகிறார்.

## நாச்சியார் தோற்றம்

**உத்சவரும் மூலவரும்:-** (அதிகாரார்ச்சை) நான்கு திருத்தோள்களுடன், அருளே வடிவாய், அழகே தேக்கமாய், அருள் சுரக்கும் புன்முறுவலுடன், கிழக்கே திருமுக மண்டலத்துடன் அமுதன் கருவறைக்கு வலப்பக்கத்தில் தனிக்கோயில் கொண்டெழுந்தருளுவாள். அருட்சக்தி மிகுந்த அன்னையாம் ஸ்ரீ கோமளவல்லித் தாயாரின் தரிசனம் அப்பொழுதைக்கப்பொழுது ஆராவமுதமாய்த்தான் இருக்கும்.

## திருவாராதன முறை

பாஞ்சராத்திர ஆகமமுறை. (தஞ்சைக்கு அருகில் உள்ள வடுவூர் இத்தலத்தின் அபிமானம் பெற்றது.)

## சம்பிரதாயம்

வடகலை ஆசாரிய சம்பிரதாயம்.

## காட்சி பெற்றவர்கள்

ஹேம மகருஷி முதலானோர்கள். பிற்காலத்தில் திருமழிசைப் பிரான் முதலிய ஆழ்வார்களும், மற்றுமுள்ள பெரியோர்களும்.

## உகந்தருளின மகான்கள்

மகரிஷிகள், ஆழ்வார்கள், ஆசாரியர்கள் இவர்களைத் தவிரவும் அண்மையில் எழுந்தருளி இருந்த ஸ்ரீமத் அகோபிலமடம் திருக்குடந்தை அழகிய சிங்கர், ஸ்ரீரங்கம் பெரிய ஆசிரமத்தைச் சேர்ந்த ஆண்டவன் முதலானோர்களும், தற்சமயம் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீமத் அகோபிலமடம், ஸ்ரீ வேதாந்த தேசிக யதிந்திர மகாதேசிகன், ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவன், ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மகாதேசிகன் முதலானோர்கள். மற்றும் அரும்பெரும் தமிழ்ப் புலவர்கள், வடமொழிப் புலவர்கள், சைவ சமயப் பேரறிஞர் முதலானோர்கள்.

## தல வகை

1. திவ்விய தேசம் 2. பௌராணிகம் 3. ஆர்ஷம் 4. சுவயம் வ்யக்தம் 5. ஆசாரியர்கள் உகப்பு. யாவும் பொருந்திய தலம். சோழநாட்டுத் திருமால் திருப்பதிகளுள் சோழநாட்டுத் திருப்பதிகள் 40-ல் 14-வது தலம். சுவயம் வ்யக்தத் தலங்கள் 12-ல் ஒன்று. திருவரங்கம், திருவேங்கடம் என்ற திருப்பதிகளுக்கு அடுத்து மூன்றாவது திருப்பதி.

## தீர்த்தங்கள்

பொற்றாமரை-காவிரி-அரிசொல் ஆறு முதலியன.

## தலப் பெயர்கள்

1. பாஸ்கர க்ஷேத்திரம் 2. திருக்குடந்தை 3. குடமுக்கு 4. கலியாணபுரம் (5. தேவலோகப்பட்டணம் 6. சிவவிஷ்ணுபுரம் 7. மந்த்ராதி தேவதாஸ்தானம் 8. சார்ங்கராஜன்பட்டணம் 9. க்ஷேந்திரஸாரம் 10. ஒளிர்மிகுபட்டணம். இவைத் தல புராணப் பெயர்கள்.) திருவரங்கத்தை மேலையவீடு என்றும், திருக்கண்ணபுரத்தை கீழையவீடு என்றும் அழைப்பதுபோல் இத்தலத்தை 11. நடுவீடு எனவும் பெரியோர்கள் அழைப்பார்களாம் 12. பஞ்சகுமாரச யாத்திரைத் தலம்.

## நாள்தோறும் நடக்கும் ஆராதனங்கள்

1. அதிகாலை விசுவ ரூபம் 2. காலஸந்தி 3. உச்சிக்காலம் 4. ஸாயரக்ஷை 5. இராக்காலம் 6. அர்த்தஜாமம்.

## சுற்றுக் கோயில்கள் (கோயிலுக்குள்)

1. பாதாள ஸ்ரீநிவாஸன் சன்னிதி 2. சேனை முதலியார் சன்னிதி 3. தீராவினைகள் தீர்த்த பெருமாள் சன்னிதி 4. சித்திர ஸ்ரீநிவாஸன் சன்னிதி 5 ஐயாகுமார தாத தேசிகன் சன்னிதி 6. ராஜகோபாலன் சன்னிதி 7. இராமன் சன்னிதி 8. கண்ணன் சன்னிதி 9. ஆண்டாள் சன்னிதி 10. பெரியாழ்வார் சன்னிதி

## அருகே உள்ள விஷ்ணு - சிவத் தலங்கள்

1. ஒப்பிலிஅப்பன் கோயில் (திருவிண்ணகர்) 2. நாச்சியார் கோயில் 3. திருச்சேறை 4. நாதன்கோயில் 5. ஆடுதுறைப் பெருமாள் கோயில் 6. கவித்தலம் 7. புள்ளம்பூதங்குடி 8. ஆதனூர் 9. திருவெள்ளியங்குடி என்ற ஒன்பது திவ்விய தேசங்கள் நவ ரத்தின மாலைபோல் ஊரைச் சுற்றியுள்ளன. 10. தொண்டரடிப் பொடியாழ்வார் அவதாரத் தலமாகிய திருமண்டங்குடி அருகே உள்ளது. 11. மற்றும் சிவராத்திரிப் புகழ்பெற்ற திருவைகாவூர் என்ற சிவத் தலமும் 12. ஊரின்கண்ணே உள்ள ஸ்ரீ சோமேஸ்வரர் கோயில் 13. ஸ்ரீ அபிமுகேஸ்வரர் கோயில் 14. ஆதி கும்பேசுவர் கோயில் 15. நாகநாதசுவாமி கோயில் 16. பிரமன் கோயில் முதலியனவும் 17. சுவாமிமலை 18. பட்டீசுவரம் 19. திருவலஞ்சுழி 20. இன்னம்பரர் கோயில் 21. திருநாகேசுரம் 22. திருப்புவனம் 23. திருவிடைமருதூர் 24. திருவாவடுதுறை 25. திருப்

புனந்தாள் 26. பந்தணைநல்லூர் 27. தாராசுரம் முதலிய சிவத் தலங்களும் 28. பழங்காலராமன் சன்னிதி 29. சக்கரபாணிசுவாமி சன்னிதி 30. கோபாலன் சன்னிதி 31. ஸ்ரீ காஞ்சிகாமகோடி மடம் 32. ஸ்ரீ ஆதிவராகப் பெருமாள் சன்னிதி 33. வரதராஜப் பெருமாள் சன்னிதி 34. லக்ஷ்மி நாராயணப் பெருமாள் சன்னிதி 35. வேத நாராயணப் பெருமாள் சன்னிதி முதலியன உள்ளன. ஊரைச் சுற்றி 10 மைல்களுக்குள் பல சிவவிஷ்ணு ஆலயங்கள் இருப்பதால் இவ்வூரைப் பஞ்சக்ரோச யாத்திரைத் தலம் என்றும் கூறுவதுண்டு.

## மங்களாசாஸனம்

1. பூதத்தாழ்வார் 2. பேயாழ்வார் 3. நம்மாழ்வார் 4. திருமழிசை ஆழ்வார் 5. பெரியாழ்வார் 6. ஸ்ரீ ஆண்டாள் 7. திருமங்கை ஆழ்வார் என்ற ஏழு ஆழ்வார்களால் மங்களா சாஸனம் பண்ணப்பட்ட பெரும் திவ்விய தேசம்.

**1. பூதத்தாழ்வார் :**

"தமருள்ளம்" (2ம் திருவந்தாதி 70வது பாசுரம்)
"எங்கள் பெருமான்" (2ம் திருவந்தாதி 97வது பாசுரம்)

**2. பேயாழ்வார் :**

"சேர்ந்த திருமால் கடல் குடந்தை" (3ம் திருவந்தாதி 30வது பாசுரம்)
"விண்ணகரம் வெப்பதா" (3ம் திருவந்தாதி 62வது பாசுரம்)

**3. திருமழிசை ஆழ்வார் :**

"நாகத்தணைக் குடந்தை" (நான்முகன் திருவந்தாதி 36வது பாசுரம்)

"இலங்கை மன்னனைந்தொடைந்து" என்று தொடங்கும் பாசுரம் முதல் "நடந் தகால்கள் நொந்தவோ" என்ற பாசுரம் முடிய 6 பாசுரங்கள். (திருச்சந்த விருத்தம் 56 முதல் 61 முடிய பாசுரங்கள்).

**4. நம்மாழ்வார் :**

"ஆராவமுதே" பதிகம் (திருவாய்மொழி. 5-8)
"தொல்லை அம்சோதி" (திருவாய்மொழி. 8-2-6)

"மடந்தையர் வாழ்த்தலும்" (திருவாய்மொழி. 10-9-7)

5. பெரியாழ்வார் :

"கொங்கும் குடந்தையும்" (பெரியாழ்வார் திருமொழி 2-6-2)
"ஆலயத்திலையான்" (பெரியா-திருமொழி 2-6-6)
"குடங்கள் எடுத்து" (பெரியா-திருமொழி 2-7-7)

6. ஸ்ரீ ஆண்டாள் :

"பாலா லீலையில்" (நாச்சியார் திருமொழி 13-2)

7. திருமங்கையாழ்வார் :

"ஆவியே அமுதே" (பெரிய திருமொழி 1-1-2)
"இற்பிறப்பு அறியீர்" ( ,, 1-1-7)
"ஊரான் குடந்தை உத்தமன்" ( ,, 1-5-4)
"அன்றுயர் குல" ( ,, 2-4-1)
"வாளாய கண்பனிப்ப" ( ,, 3-6-5)
"குயிலாலும் வளர் பொழில்" ( ,, 3-6-8)
"வாராளும் இளம் கொங்கை" ( ,, 5-5-7)
"பொங்கேறு நீள் சோதி" ( ,, 6-8-9)
"கிடந்த நம்பி குடந்தைமேவி" ( ,, 6-10-1)
"வந்த நாள் வந்து" ( ,, 7-3-3)
"பேரானைக் குடந்தைப் பெருமானை" ( ,, 7-6-9)
"வந்தா யென்மனத்தே" ( ,, 8-9-5)
"தோடவிழ் நீலம்" ( ,, 9-2-2)
"வானையா ரமுதம்" ( ,, 10-1-6)
"இங்கே போதுங் கொலோ" ( ,, 10-10-8)
"அறியோமே என்று" ( ,, 11-3-4)
"அண்டத்தின் முகடழுந்த" ( ,, 11-6-9)
"மூவரில் முதல்வனாய" (திருக்குறுந் தாண்டகம்-6)
"காவியை வென்ற" ( ,, 14)
"ஒரு பேருந்தியிருமலர்த் தவிசில்" (திருவெழு கூற்றிருக்கை முழுவதும்)
"காரார் குடந்தை" (சிறிய திருமால்)
"பூங்குடந்தை" (பெரிய திருமால்)

"பொங்கார்மெல்" (திருநெடுத் தாண்டகம் 17)
"முற்றாராவன" ( ,, 19)
"அன்றாயர்" ( ,, 29)

## குறிப்பு

சித்திர இரதபந்தத்தில் இயற்றப்பட்ட "திருவெழு கூற்றிருக்கை" என்ற பிரபந்தம் முழுவதும் இப் பெருமாள் பற்றியது என்பது இத்தலத்தின் தனிச் சிறப்பை உணர்த்த வல்லது. (சைவசமயம் அடியார்களில் தலைசிறந்த ஞானசம்பந்தரும் இதுபோல் ஒரு பிரபந்தம் அருளி உள்ளார்.) இதன் சிறப்பாவது: கீழும் மேலும் ஏழேழு பிரிவுகளாகச் சில அடிகளை இருதடவை எண்ணிக்கைக் கணக்குள்ளவரையில் அமைத்து, நடுவே உள்ள பகுதியில் யாதொரு எண்ணிக்கையையும் காட்டாது எம் பெருமானைப் பேசிச் சரணம் அடையும் படியாய் அமைவது. பதினான்கு உலகினிற்கும் காக்கும் கடவுளே அமுதனாய் இங்கு எழுந்தருளி உள்ளான் என்பதை உணர்த்தவல்லது.

## தலத் தனிச்சிறப்பு

1. எங்கும் கோயில்கள் நிறைந்த ஊர்.

2. பிரமனுக்குத் தனிக்கோயில் அமைந்த ஊர்.

3. திருமழிசைப் பிரான் கடைசியாக இவ்வூரில் எழுந்தருளி இருந்து அமுதனை நாள்தோறும் மங்களாசாஸனம் செய்து கொண்டு பல ஆயிரம் ஆண்டுகள் யோக நிலையில் எழுந்தருளி இருந்த தலம்.

4. அருகே உள்ள நந்திபுரத்தில் கவிகாளமேகப் புலவர் பிறந்த ஊர்.

5. நம்மாழ்வாரும் - திருமங்கை ஆழ்வாரும் மிகவும் உகந்த தலம். இருவருக்கும் இப்பெருமானிடம் தனிஈடுபாடு.

6. மகாமகச் சிறப்புற்ற தலம். மகாமகப் பெருநாள் 12 ஆண்டுக் கொருதடவை வருவதாகும். குரு சிம்மராசியில் வரும் வருடமாகவும், சூரியன் கும்பராசியில் இருக்கும் மகத்தன்று நிகழும் பெரும் திருவிழாவாகும். அன்று எல்லாப் புண்ணிய நதிகளும் மகாமகக் குளத்திலும் (பொற்றாமரையிலும்) சேருவதாகத் தல புராணம் கூறும். அன்று புனித நீராடினால் பதினாயிரம் பிரம்மஹத்தி தோஷங்கள் நீங்குமாம்.

7. கல்விச் சிறப்புப்பெற்ற இவ்வூரை "தென்னிந்தியாவின் கேம்ப்ரிட்ஜ்" (Cambridge of South India) எனவும் தற்காலப் பெயராக அழைப்பதுண்டு.

8. திருவரங்கத்தைப்போல் இத்தலத்திலும், மூலவரும், உத்சவரும் ஆழ்வார் அருளிச் செயல்பெற்றவர்களானதால் இத்தலத்தையும் "உபயபிரதான திவ்ய தேசம்" என அழைப்பார்கள்.

9. இவ்வெம்பெருமான் திருக்கோயிலின் வடக்கு வெளிச் சுற்றைப் பெரியாழ்வார் "தூநிலா முற்றம்" என அருளிப் பாடிட்டுள்ளார்.

10. இத்தலத்து எம்பெருமான் திருமழிசையாழ்வாருக்குத் தமது "பிரான்" என்ற திருநாமத்தை அளித்து, தான் ஆழ்வாராக ஆனார்.

11. கீதைப் பேருரையின் உரையாகிய "தாத்பர்ய சந்திரிகை" மங்களவாழ்த்திலும் ஸ்ரீ தேசிகன் சார்ங்க ராஜாவைக் குறிப்பிடுவதால், இவ்வெம்பெருமானே கீதை அருளிய கண்ண பிரான் என்று பெரியோர் பணிப்பர்.

12. இப்பெருமானின் கருவறையின் எதிரில் உள்ள 12 கால் மண்டபத்துக்குத் திருமாமணி மண்டபம் என்ற பெயர் ஏற்பட்டிருப்பதாலும் வைகுந்தத்தில் இருந்த வைதிக விமானமே கருவறை விமானமாக அமைந்திருப்பதாலும், திருவரங்கம்போல இத்தலமும் ஒருவகையில் பூலோக வைகுந்தமாகும் என்பர். அரங்கன், திருவேங்கடமுடையான், அமுதன் மூவரும் ஒருவரே என்பது வைணவப் பெரியார்கள் திருவுள்ளம்.

13. வானளாவி உயரம் 146 அடிகள்கொண்டதாய் கீழ், தெற்கு, வடக்கு அகலம் 90 அடிகள்கொண்டதாய், மேல்பக்கம் 51 அடிகள்கொண்டதாய் காணப்படும் அரசகோபுரமும் இக் கோவிலின் சிறப்பை உணர்த்தவல்லது.

14. ஸ்ரீ ஆராவமுதன் ஸ்ரீமந்நாதமுனிகளின் மூலம் மறைந்திருந்த திவ்வியப்பிரபந்தங்களை நான்காக வகுத்து வெளியிட்டருளினர் ஆனபடியாலும் இப்பெருமானுக்கு ஆழ்வார் என்ற திருப்பெயர் ஏற்பட்டது. (நாதமுனிகள் வரலாற்றைப் பிற் பகுதியில் காணலாம்.)

15. இத்தலத்தில் "பரமபத வாசல்" என்ற தனித்தவொரு வாசல் இல்லை. தக்ஷிணயன, உத்தராயண தேவதைகளே இரு வாசல்களாக உள்ளனர். இத்தலத்தின் சிறப்பால் தக்ஷிணயனத்தில் இறந்தவர்களுக்கும் மோக்ஷம் உண்டாம்.

16. "மெய்க்காவலிடையார்" என்ற ஒரு அடியார் இக் கோயிலை ஆபத்திலிருந்து காப்பாற்றியதற்காக, அவ்வடியாருக்குத் திருத்தேரில் இருந்து இறங்கிவந்ததும் பெருமாளும் நாச்சியாரும் தீர்த்தம் மரியாதை தந்தருளுகிறார்கள்.

17. வடக்குத் திருவுண்ணாழிச் சுற்றில் ஸ்ரீ பாதாள ஸ்ரீநிவாசன் எழுந்தருளியுள்ளார்.

18. "பிருகு" மகரிஷியே "ஹேமரிஷியாக" இத்தலத்தில் தவம்செய்து பொற்றாமரையாளாகிய ஸ்ரீ கோமளவல்லித் தாயாரை அமுதனுக்குத் திருமணம் செய்துகொடுத்தார்.

19. ஸ்ரீ திருக்குடந்தை தேசிகன் என்ற ஸ்ரீ கோபாலார்ய மகாதேசிகன் இப்பெருமானுக்குப் பல திருப்பணிகளைச் செய்து, பெருமாளையே தாம் அனைத்துப் பாகவத கரஸ்பரிசம் ஏற்படச் செய்தார்.

20. "கன்னியாதீர்த்தம்" என்ற மகாமகக் குளக்கரையில் அமர்ந்திருக்கும் நவகன்னிகைகளும் மேற்குமுகமாக ஸ்ரீ கோமளவல்லித் தாயாரை நோக்கியவண்ணம் அவளது அருள்வேண்டி நிற்கிறார்கள்.

21. இத்தலத்து ஸ்ரீ அமுதன் தேர் மிகப் பெரியதாய் புகழ் பெற்றது. அது திருமங்கையாழ்வாரின் பாடலும் பெற்றது எனவும் பெரியோர்கள் சிறப்பித்துப் பேசுவார்கள். மற்றும் இத்தேர் திருமங்கையாழ்வாராலேயே செய்துவைக்கப்பட்டது எனவும் சொல்கிறார்கள்.

22. இத்தலத்தில் தங்கினாலும், தங்குவதற்காக ஓர் அடி எடுத்துவைத்தாலும், தங்க மனதால் எண்ணினாலும் அளவற்ற புண்ணியம் உண்டு என்று பல தலபுராண நூல்கள் பகருகின்றன.

23. மாபெரும் பக்தரான ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண சுவாமி என்பவர் இறந்ததும் அவருடைய பக்திக்கு மெச்சி ஸ்ரீ அமுதனே அவருக்கு ஈமக்கடன்களைத் தாம் பிள்ளையாகி நின்று செய்தனராம்

இந்நிகழ்ச்சி இன்னும் "ஐப்பசி அமாவாசையன்று" நடைபெற்று வருகிறது. இராமன் முன்பு பெருவுடையார் என்ற ஜடாயுவுக்கு ஒரு தடவைதான் ஈமக்கடன் செய்தார் ஆனால் இங்கு வருடம் தோறும் பெருமான் பக்தருக்கு அக்கடனைச் செய்து வருகிறார் என்பது ஒரு தனிச் சிறப்பு.

24. தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாயுள்ள இவ்வூரில் எங்கு நோக்கினும் பசுமையும் நீர்வளமும் கொண்ட நிலங்களே தென்படும். அத்துடன் இந்த ஊர் தஞ்சை மாவட்டத்திலேயே சிறந்த வியாபாரத் தலம், பித்தளைப் பாத்திரம், புடவை, பந்தல் அமைத்தல், வெற்றிலை முதலிய வியாபாரங்களுக்கு மிகவும் புகழ்பெற்றது.

25. இத்தலத்தில் ஆழ்வார்களைத் தவிரவும் மற்றைய ஸ்ரீ வைணவ ஆசாரியப்பெருமக்களும் ஸ்ரீகாஞ்சிப்பெரியவாளும் மற்றும் சைவசமயக்குரவர்களும், தென்மொழி வடமொழிப் புலவர்களும், உபயவேதாந்திகளான தற்கால ஸ்ரீ வைணவ ஆசாரியர்களும் இன்னோரன்ன பலரும் மிகவும் ஈடுபட்டுள்ளார்கள்.

26. ஒரு குழப்பமான காலத்தில் இந்தத்தலத்துப் பெருமானைத் திருக்கோட்டியூர் பெருமாள் கோயிலில், கல் திரை யிட்டு மறைத்துக் காப்பாற்றியதற்காக இன்னும் திருக்கோட்டியூர் பெருமாளுக்கு நன்றிக்காகத் திருக்கோட்டியூர்ப் பாசுரம் ஒன்றை இங்குப் பெரியார்கள் அருளிச்செயல் கோஷ்டியில் ஓதுகிறார்கள்.

## மண்டபங்கள்

சுமார் 18 மண்டபங்கள்.

## சுற்றுக்கள்

சந்நிதி வீதி தொடங்கி, நான்கு தெருக்கள் சுற்றுகக் கணக் கிட்டு மூன்று சுற்றுகள் உள்ள கோயில். பல ஆண்டுகளுக்கு முன்பு இப்பொழுது உள்ள கடைத்தெருவும் சேர்ந்து பெருமாளின் சுற்றுகக் கணக்கிடப்பட்டு மொத்தம் இப்பெருமாள்கோயிலுக்கு ஐந்து சுற்றுகள் இருந்தன என்று தலப்பெரியோர்கள் சிலரின் திருவுள்ளம்.

## கோயில் பிரிவு

'அ'பிரிவு கோயில் தமிழ்நாடு அரசு, அறநிலையப் பாதுகாப்புத் துறையின் மேற்பார்வையில் 5 அறங்காவலர்கள், ஒரு இறை பணியாளர் இவர்களின் சீரிய நிர்வாகத்தின்கீழ் செயல்பட்டு வரும் கோயில், தஞ்சை துணை ஆணையர் ஆளுகைக்குட்பட்டது.

## தல புராணங்கள்

பழைய வடமொழிப்புராண நூல்களான சேஷதர்மம், கும்பகோண மாகாத்மியம், திருவிண்ணகர் மாகாத்மியம், திருச்சேறை மாகாத்மியம், நந்திபுரவண்ணகர மாகாத்மியம், வானமாமலை மாகாத்மியம் ஸ்ரீமுஷ்ணமாகாத்மியம் முதலிய நூல்களில் திருக்குடந்தையின் சிறப்பு ஆங்காங்கு கூறப்பட்டுள்ளது. இதைத் தவிரவும் 1952ம் ஆண்டு 'திருக்குடந்தை சார்ங்கராஜ வைபவம்' என்றதொரு நூலை முன்பு கீர்த்தி மூர்த்தியாய் எழுந்தருளி இருந்த பகவத்விஷயம். ஸ்ரீ உ. வே. இளையவில்லி ஸ்ரீநிவாஸாசாரியர் சுவாமியால் வெளியிடப்பட்ட நூலும் 1964ல் ஸ்ரீ லெ. ராஜகோபாலன் என்பவரால் தல சிறப்புக் குறிப்புகளுடன் கூடிய "ஸம்ப்ரோக்ஷண மலர்" என்றதொரு நூலும் வெளியிடப்பட்டது. சைவ சமயப் பேரறிஞர்களுள் தலைசிறந்த முத்தமிழ்க்கடல் மகாவித்துவான் திரு. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களால் இத்தலத்தின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. ஆனால் தற்கால முறையில் கோயிலுக்கென்று இந்தத் தேவஸ்தானத்தாரால் வெளியிடப்படும் முதல்நூல் இதுவே ஆகும்.

## கோயில் திருப்பணிகள்

அவ்வப்பொழுது சில சிறு சிறு திருப்பணிகளும், முன்பு ஸ்ரீ திருக்குடந்தை தேசிகன், ஸ்ரீலக்ஷ்மிநாராயண சுவாமி முதலிய மகான்கள் செய்த திருப்பணிகளும் பல நடந்தன. அதன் பின்பு அண்மையில் 28—6—64 (குரோதி—ஆனி, 15ம் தேதி) நடந்த மிகப்பெரிய ஜீர்ணோத் தாரணமகாஸ்ம்புரோக்ஷணம் குறிப்பிடத் தக்கதாகும். இப்பொழுது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் அகோபிலமடம் அழகிய சிங்கரும், ஸ்ரீமத் திருக்குடந்தை

ஆண்டவனும், மற்றும் பலரும் இவ்வெம்பெருமானிடம் ஈடுபட்டு பற்பல திருப்பணிகளை அவ்வப்பொழுது உகந்து செய்து வருகிறார்கள்.

## திருவாபரணங்கள் முதலியன

ரத்தினகிரீடம், பச்சைக்கல்கிரீடம், லக்ஷ்மிபதக்கம்,அமுதன் பதக்கம், கல் இழைந்த பஞ்சாயுதங்கள், தாயார் பத்மஹஸ்தம், வர அபயமுத்திரைகள், கல் இழைத்த வடகலைத் திருமண்காப்பு கண்டசரம், தாயார் கிரீடம், கர்ணபத்ரம், ஒட்டியாணம் முதலியன இவைகளைத் தவிர அவ்வப்பொழுது பக்தப்பெருமக்கள் பக்தியுடன் சமர்ப்பித்த பலவித திருவாபரணங்களும் உள்ளன. பல தங்க வெள்ளி வாகனங்களும் உள்ளன. ஸ்ரீ கோமளவல்லித் தாயார், அமுதன் இவர்களுக்குச் செய்யும் எந்தவிதமான கைங்கரியமும் அக்ஷய்யபலத்தைத்தரும்.

## சிறப்புத் திருவிழாக்கள்

**சித்திரை:** அக்ஷயத் ருதீயை–அதிகாலையில் 12 கருடசேவை சித்திரைத் திருவிழா. சித்திரை மாதம் சித்திரை நக்ஷத்திரம் திருத்தேர். உடையவர் உத்சவம்.

**வைகாசி:** பௌர்ணமியை 7வது திருநாளாகக் கணக்கிட்டு வசந்த உத்ஸவம்–நம்மாழ்வார் உத்ஸவம்–ஸ்ரீ ஐயா குமாரதாத தேசிகன் திருநக்ஷத்திரம்.

**ஆடி:** பதினெட்டாம்பெருக்கு–திருவாடிப்பூரம் ஸ்ரீஆண்டாள் உத்ஸவம் 3 நாட்கள். சுக்கிலதசமி திதியை 7 வது நாளாக வைத்துத் திருப்பவித்திரோத்ஸவம் – ஜ்யேஷ்டாபிஷேகம் (மூலவர் தைலக்காப்பு.)

**ஆவணி:** உறியடி உத்ஸவம்-விநாயகசதுர்த்தி உத்ஸவம்.

**புரட்டாசி:** நவராத்திரி உத்ஸவம் - விஜயதசமி அம்பு விடுதல் ஸ்ரீநிகமாந்தமகாதேசிகன் உத்ஸவம் (புரட்டாசித் திருவோணத்தில் தொடக்கம்.)

**ஐப்பசி:** தீபாவளி உத்ஸவம் - மூலவர் புனுகுக்காப்பு-ஸ்ரீலக்ஷ்மிநாராயண சுவாமிக்குத்திதி.

**கார்த்திகை:** கைசிகபுராணம் படிக்கப்பெருமான் திருச்செவிசாய்தல் - திருக்கார்த்திகை சொக்கப்பனைத் திருவிழா-அனத்யயனப்பட்டோலை இடுதல் -ஊஞ்சல் திருவிழா.

**மார்கழி:** 1ம் தேதி முதல் 10ம் தேதி வரை பகல்பத்து 11 முதல் 20 வரை இராப்பத்துத் திருவிழா. 22ம் தேதி ஸ்ரீ தேசிகபிரபந்தம் - மகரஸங்கிரமணத் திருவிழா. மார்கழி 10ம் தேதி இத்தலத்தில் மட்டும் திருமங்கை மன்னன் திருவடி தொடுதல் திருவிழா - 19ம் தேதி பெருமாளுக்கு நாச்சியார் திருக்கோலமும், நாச்சியாருக்குப் பெருமாள் திருக்கோலமும் கண்டருளப் பண்ணுவது. இந்த நிகழ்ச்சி வேறு தலங்கள் எங்கும் கிடையாது 20ம் தேதி ஆழ்வார் திருவடிதொடல். 15ம் தேதி பதினைந்தாம் சேவை - 19ம் தேதி பத்தொன்பதாம் சேவை.

**தை:** பிர்மோத்ஸவம் - முத்தரசன்படி உத்ஸவம் - கனு உத்ஸவம், பாரிவேட்டை உத்ஸவம், திருவேடர்மறி - மட்டைஅடி, தாயார் அத்யயன உத்ஸவம் - தை அமாவாஸ்யை - ரதஸப்தமி.

**மாசி:** தெப்போத்ஸவம்.

**பங்குனி:** யுகாதிப்பண்டிகை - தாயார் பிர்மோத்ஸவம் - திருக்கல்யாண உத்ஸவம் - ஊர்வலம் முதலியன.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் உத்திரத்திலும் தாயார் எழுந்தருளுவார். மாதப்பிறப்புகள்,ஏகாதசிகள்,அமாவாஸ்யைகள் சித்திரை-சிரவணம் இந்நாட்களில் பெருமாள் புறப்பாடு உண்டு. புறப்பாடுகளின் இடையே சிரவண நக்ஷத்திரம் வந்தால் ஸ்ரீதேசிகனும் சுற்று எழுந்தருளுவர்.

## தேசாந்திரி கட்டளைகள்

இவ்வாலயத்தில் நாள் ஒன்றுக்கு சுமார் 25 நபர்களுக்கு தேசாந்தரக்கட்டளையிலிருந்து உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீ பாதாள ஸ்ரீநிவாஸன் திருவடிகளே துணை

# 2. திருக்கோயில் விளக்கம்

❀

[இக்கோயில் :- கீழ்மேல்-நீளம் 585 அடிகள். கீழ்ப்பக்கம்-தெற்கு வடக்கு அகலம் 221 அடிகள். மேல்பக்கம் - தெற்கு வடக்கு அகலம் 188 அடிகள்.]

த்ரிம்சத த்ரிகோடிவஸு ருத்ர திவாகராதி
தேவாதி தேவகண ஸந்தத ஸேவ்யமாநம்
அம் போஜஸம்பவ சதுர்முக கீயமாநம்
வந்தே சயாநமிஹ போகிநி சார்ங்கபாணிம்

எங்கள் பெருமான்! இமையோர் தலைமகன்நீ
செங்கண் நெடுமால்! திருமார்பா - பொங்கு
படமுக்கின் ஆயிரம்வாய்ப் பாம்பணைமேல் சேர்ந்தாய்
குடமுக்கில் கோயிலாக் கொண்டு

—பூதத்தாழ்வார்.

## மூன்றும் சுற்று (நான்கு தெருக்கள்)

[ஸ்ரீ வைணவ ஆசாரிய ரத்தினமான பட்டர் "ஸ்ரீரங்கராஜ ஸ்தலத்தில்" பெரிய பெருமாளை அனுபவித்த வண்ணம் திருத்தேரடி தொடங்கி, அமுதன் ஆத்தானம் வரை அனுபவிக்கும்படி.]

## திருத்தேர்

அமுதன் திருக்கோயிலின் முன்புறம், கீழவீதியின் நடுவில் நாலுகால் மண்டபத்துக்கு வடக்கிழக்கில் பெரியதொரு தேரும், அத்திருத்தேர் மண்டபமும் உள்ளன. இது இப்பக்கத்தில் உள்ள பெரிய தேர்களில் ஒன்றாகும். இத்தேரையும் திருமங்கை ஆழ்வார்

மங்களாசாஸனம் செய்தார் என்றும் திருமங்கை ஆழ்வாரே முதன் முதலில் இத்தேர்த் திருப்பணியைச் செய்தார் என்றும் பெரியோர் பணிப்பர். இதனைச் "சித்திரத் திருத்தேர்" என அழைப்பார்கள். சித்திர=வியத்தகு, தேர்=சித்திரத் தேர் எனவும் நயம்படப் பொருள் கூறுவதுண்டு. இதனை ஸ்ரீரங்கஸ்வாமி ஐயங்கார் என்ற பக்தர் பெருந்தகை முன்பிருந்தபடியே மிகுந்த பொருட்செலவில் புதுப்பித்தார். இதனை இப்பொழுது இழுப்பதில்லை. கடைசி முறையாக 1936இல் தான் இத்தேர் இழுக்கப் பட்டது. நாலுகால் மண்டபத்துக்குத் தென்புறமாகச் சிறியதொரு திருத்தேரும் உள்ளது. சிறு மண்டபமும் உள்ளன. இதைத்தான் தற்சமயம் பெரும் திருவிழாவில் சித்திரத் தேராக உபயோகிக் கிறார்கள்.

## நாலுகால் மண்டபம்

பெரிய அரசகோபுரத்திற்குக் கிழக்கில் நேர் எதிரில், "நாலுகால் மண்டபம்" ஒன்று விமானத்துடன் தென்படும். இதில் உறியடித் திருவிழாவின் பொழுதும் சொக்கப்பனைத் திருவிழாவின் பொழுதும், சார்ங்கராஜா சிறிது நேரம் எழுந்தருளுவர்.

## ராஜகோபுரம்

நாலுகால் மண்டபத்திலிருந்து மேற்கு நோக்கிச் சென்றால், மாபெரும் ராஜகோபுரம் உள்ளது. இக்கோபுரம் 11நிலைகள் கொண்டது. இதன் உயரம் 146 அடிகள். கீழ்ப்பக்கம் தெற்கு வடக்கு அகலம் 90 அடிகள். மேல்பக்கம் தெற்கு வடக்கு அகலம் 51 அடிகள். நம்மாழ்வார் திருவாய் மொழியின் கடைசிப் பதிகத்தில் திருநாட்டின் அழகினை எடுத்து அருளிச்செய்யும் பொழுது, "கொடிஅணி நெடுமதில் கோபுரம் குறுகினர்" என்று அருளிச்செய்ததற்கொப்ப இக்கோபுரமும் அடியார்கள் திருவுள்ளத்திற்கு ஸ்ரீ வைகுந்தத்தின் "திருக்கோபுர நயனரோ" என்று உகக்கும்படி மிகவும் மிடுக்காய்த் தென்படும். குடந்தை எம்கோவலன்குடி அடியார்களுக்கு ஸ்ரீ வைகுந்தத்தில் தனிச் சிறப்புண்டு என்பதையும் நம்மாழ்வார் குறிப்பிட்டுள்ளார். இக் கோபுரம் முழுவதும் சித்திரவேலைப்பாடுள்ளது. உச்சிவரை ஏறுவதற்குப் பாங்காக, உட்புறம் மரப்படிக்கட்டுகள் அமைக்கப்

பட்டுள்ளன. உச்சியில் சுதையாலான 11 கும்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன. அங்கு மனிதர் உலவும்படி இடவெளியும் உள்ளது. அங்கு நின்று மேல்நோக்கினால் விண்ணுலகம் சென்று விட்டோமோ! என்று எண்ணும்படி உள்ளம் உவக்க இருக்கும். இக்கோபுரத்தின் காட்சி சுற்றிப் பல மைல்களுக்குத் தெரியும். "கும்பகோணத்தில் கோபுரம் அழகு" என்ற பழமொழியை ஏற்படுத்திய விண்ணளாவிய கோபுரம் இது.

## வசந்த மண்டபம்

இக்கோபுரத்தின் வாயிலாக உள்ளே நுழைந்ததும் தெற்குப் பக்கம் "தை அமாவாஸ்யை மண்டபம்" உள்ளது. இம் மண்டபத்தைத் தேவஸ்தானத்தார் அண்மையில் திருப்பணி செய்தார்கள். இங்குதான் இன்று "தேவஸ்தான அலுவலகம்" உள்ளது. இம்மண்டபத்திற்கு நேர் எதிரில் "வசந்த மண்டபம்" உள்ளது. இம்மண்டபத்தில் பெருமாள் - தாயார் இவர்களின் வசந்தத் திருவிழா நடைபெறும்.

## நூற்றுக்கால் மண்டபம்

வசந்த மண்டபத்தை ஒட்டி மேற்கில் நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. இங்கு பகற்பத்து, இராப்பத்து, தேசிகப்பிரபந்த உத்ஸவங்கள் நடைபெறும். பிர்மோத்ஸவ நாட்களில் பெருமாள் அலங்காரங்கள் இங்கு நடைபெறும். இம்மண்டபத்தை ஒட்டி "கோசாலை" ஒன்று உள்ளது. பெருமாளுக்குப் பாலமுதுப்படி செய்யப் பசுக்கள் இங்கு இருக்கின்றன.

## ஆழ்வார்கள் சந்நிதி

தை அமாவாஸ்யை மண்டபத்தின் மேல்புறம் மூன்று வாயிற் படிகள் கொண்ட ஆழ்வார்களின் சந்நிதிகள் உள்ளன. உள்ளே முதலாழ்வார்கள், தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருமங்கை ஆழ்வார், பெரியாழ்வார் சந்நிதிகளும், ஸ்ரீமந் நாதமுனிகள், ஆளவந்தார் சந்நிதிகளும், மேலும் நம்மாழ்வார், மதுரகவிகள், திருப்பாணழ்வார், திருமழிசைப்பிரான், குலசேகராழ்வார் சந்நிதி களும், திருக்கச்சி நம்பிகள் சந்நிதியும் உள்ளன. இங்குப்

பெருமாள் எழுந்தருளி சாற்றுமுறைத் திருநாட்களில் தீர்த்தம் சடாரி, பிரசாதம் தந்தருளுவார். இங்கே ஒரு "நூல்நிலையம்" முன் மண்டபத்தில் உள்ளது.

## ஸ்ரீ தேசிகன் சந்நிதி

ஆழ்வார்கள் சந்நிதிக்கு மேல்புறம் "ஸ்ரீ வேதாந்த தேசிகன் சந்நிதி" உள்ளது. இதனில் ஸ்ரீ தேசிகன் (மூல-உத்ஸவ அருச்சா சமாதியில்), எழுந்தருளி ஸேவை தருகிறார். இங்கு ஸ்ரீ தேசிகன் ஆராதித்த லக்ஷ்மீ ஹயக்ரீவரும், அத்துடன் கூரத் தாழ்வாரும் எழுந்தருளியுள்ளார்கள். இந்தச் சந்நிதியின் சிறிய கோபுரம் முதலிய திருப்பணிகளை முன்பு ஸ்ரீ திருக்குடந்தை தேசிகன் என்று பெரும் புகழுடன் எழுந்தருளியிருந்த ஸ்ரீ கோபாலார்ய மஹா தேசிகன் செய்தருளினர் என்பர்,

**"வேதாந்த தேசிகனர் வீவில் திருக் கோபுரமும்**
**போதார் பிரபையும் பொன் னிலக**
**போதார் மகளுகக்கக் 'கோபால மாகுருவே' செய்தான்**
**அகமுகக்கை எவ்வுயிர்க்கு மாய்த்து"**

என்ற திருக்குடந்தை தேசிகன் அந்தாதிப் பாடலே இதற்குச் சான்று என்பர். திருக்குடந்தை தேசிகன் என்ற மகான் ஸ்ரீ வைணவ வடகலை சம்பிரதாயத்தின் ஒரு பிரிவான "முநித்திரய" சம்பிரதாயத்தின் முதல்வராவார். இம்மகான் திருவையாற்றுக்குப் பக்கத்தில் உள்ள ராயம்பேட்டை என்ற கிராமத்தில் அவதரித்துப் பின் இங்கு அமுதன் ஸேவையில் ஈடுபட்டு பலகால் எழுந்தருளி இருந்தார். இங்குள்ள தேசிகன் சந்நிதிக்கும் "பெருமாள் தாயார்" ஸ்ரீ தேசிகன் திருவிழாச் சாற்றுமுறை நாள் அன்று எழுந்தருளு வார்கள்.

## துவஜாரோகண மண்டபம்

ஸ்ரீ தேசிகன் சந்நிதி கருவறைக்கு அடுத்த மகா மண்டபமே துவஜாரோகண மண்டபமாகும். எதிரில் கொடி மரமும், பலி பீடமும் உள்ளன. பலிபீடத்துக்கு முன் தாயார் திருக்கலியாண மண்டபமும், அடுத்துத் திருவந்திக்காப்பு மண்டபமும், மூன்று பத்திகளுடன் அமைந்த பெரிய மண்டபமும் இங்கு உள்ளன,

# இரண்டாவது சுற்று

கொடி மரம் தாண்டி உள்ளே சென்றால் இரண்டாம் சுற்று வரும். இங்கு நுழைவுவாயிலின் மேல் இரண்டாவது கோபுரம் உள்ளது. இங்கு நூற்றுக்கணக்கான தூண்களுடன், வண்ணச் சித்திரங்களுடன் கூடிய அகன்ற "அச்யுதபூபால மண்டபம்' உள்ளது. இம்மண்டபத்தைச் சோழ மன்னர் அச்சுதபூபாலன் என்பவர் கட்டினர். ஆதலால் அவர் பெயரால் இம் மண்டபம் அழைக்கப்படுகிறது. வடபுறத்தில் யாகசாலை நீங்கலாக மூன்று சுற்றுக்கோயில்களும், வடகிழக்கில் நெற்களஞ்சியமும், தென் கிழக்கில் வாகன அறையும் தென்படும். இப்பரந்த மண்டபத்தின் நடுவில் திருக்கார்த்திகை திருநாளன்று, திருமங்கை ஆழ்வார் அருளிச் செயலைத் திருச்செவி சாற்றி, பிறகு மார்கழி அநத்யயனப்பட்டோலையைப் பெருமாள் தந்தருளுவார். வடக்கில் யாகசாலை ஏற்பட்டுள்ளது. யாகசாலையை அடுத்து கீழ்புறம் ஸ்ரீ ராஜகோபாலன் சந்நிதி உள்ளது. இக்கோவிலுள் ருக்மணி சத்யபாமையுடன் கூடிய ராஜகோபாலன் மூலவராக எழுந்தருளி யுள்ளார். இச்சந்நிதியின் முன்புறம் திவ்வியபிரபந்த வேத பாராயண கோஷ்டிகள் நடந்தேறும் பவித்திரோஸவ மண்டபம் உள்ளது. இப்பெரிய மண்டபத்தின் நடுவில் ஸ்ரீ ராமன் சந்நிதி உண்டு. இந்த சந்நிதியில் மூலவர்களாக இராமன், சீதாதேவி இலக்குமணன், திருவடி என்பவர்கள் எழுந்தருளியுள்ளார்கள். இராமன் சந்நிதிக்கு முன்புறம் ஒரு மண்டபம் உள்ளது. இதில் பல திருவிழாக்களில் பெருமாள் எழுந்தருளி சேவை தந்தருளுவர். இம்மண்டபத்துக்கு அண்மையில் கருப்பு சலவைக்கல் நாலுகால் மண்டபம் உண்டு. இதில் தாயார் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பெருமாள் சித்திரைத் திருநாள் 5வது நாளில் மாலையில் ஸ்ரீ சக்கரராஜாவுடன் எழுந்தருளி இருப்பர். விடாயகற்றி உத்ஸவத்தில் பெருமாள் மட்டும் எழுந்தருளுவர். கிழக்குக் கோடியில் கண்ணபிரான் சந்நிதி உள்ளது. அங்கு மூலவர் ஸேவையில் கண்ணன் எழுந்தருளியுள்ளார். தென்கிழக்கு மூலையில் திருமடைப்பள்ளி இருக்கிறது. திருமடைப்பள்ளி நாச்சியாருடன் இது மிகவும் அகன்ற இடமாகும். எதிரில் தாயார் கொடிமரமும், பலிபீடமும், தாயார் துவஜாரோகண மண்டபமும் சிறிய கல் ஜன்னல்களுடன் தாயார் சந்நிதிக்கு நேர் எதிரில் உள்ளன. இங்கு விநயக பூசையும், சரஸ்வதி பூசையும் நடைபெறும். தேவஸ்தான கிளை அலுவலகம் உள்ளது. இங்கிருந்து இரண்டாம் சுற்று, தெற்குப் பிரகாரத்தின் வழியாக வலமாகச் சென்றால் மேலச்சுற்றின் நடுவே மேலக்கோபுரவாசல் தென்படும்,

அதனுள் புகுந்து வெளிப்பக்கம் வந்ததும், தீர்த்தவாரிக்கும், திருக்கார்த்திகைக்கும் பெருமாள் எழுந்தருளும் 16 கால் மண்டபம் தென்படும். குளத்தின் மேல்பகுதியில் நான்கு மூலைகளிலும் நாலுகால் மண்டபங்களுடன் கூடியதும், நடுவே நீராழி மண்டபத்துடன் கூடியதுமான கீழ்ப்புறத்தில் ஸ்ரீ நரசிம்மன் சந்நிதியும், வடக்குப் படிக்கட்டில் கோமளவல்லித் தாயார்-ஹேம ரிஷி இவர்களின் சந்நிதிகளுடனும் கூடிய கீழ் மேல் 360 அடிகளும் தென் வடல் 285 அடிகளும் உள்ள மிகப்புனிதமான பொற்றாமரை என்ற புஷ்கரிணி உள்ளது. இப்பொற்றாமரையில் பண்டு ஆயிரம் இதழுள்ள பொற்றாமரையில் அமர்ந்து திருமகள் தவம் செய்தபடியால் இதற்கு லக்ஷ்மி தீர்த்தம், பொற்றாமரை என்னும் தலபுராணத்தில் கூறியபடிக்குக் குடத்தினின்று பெருகிய அமுத வெள்ளம் இக்குளத்தில் தேங்கியபடியால் அமுதவாபி என்னும் இத்திவ்ய புஷ்கரிணியை அழைக்கிறார்கள். இக்குளத்தில்தான் மாசி மகத்தில் பெருமாள் தெப்பத் திருநாள் நடந்தேறுகிறது. மற்றும் இங்கு மகரசங்கிராந்தி அன்று பெருமாளும், கனு பங்குனி உத்திர நன்னாட்களில் தாயாரும் எழுந்தருளுவார்கள். இப் புஷ்கரிணியில் நீராடும் நமக்கு நன்மைகள்யாவும் ஸ்ரீகோமளவல்லி, சாரங்கராஜாவின் அருளால் தழைக்கும் என்பார்கள். பெருமாளே இப்புஷ்கரிணியை வலம் வருகிறபடியால் இதன் பெருமை மேலும் உறுதி கொண்டுள்ளது.

## ஸ்ரீ ஆண்டாள் சந்நிதி

வடக்குப் பிரகாரத்தின் மேலக்கோடியில் தமப்பனார் பெரியாழ்வார் சந்நிதியைத் திருக்கண் சாற்றிக்கொண்டு ஸ்ரீ ஆண்டாள் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ ஆண்டாள் சந்நிதி உள்ளது. இக்கோயிலில் ஸ்ரீ ஆண்டாள், மூலவர், உத்ஸவர், தீர்த்தபேரம் என்ற நிலையில் நாச்சியார் சந்நிதிக்குள் போய் எழுந்தருளி இருக்கிறாள். இந்த சந்நிதிக்கு ஒரு தனிக்கோபுரமும் உண்டு.

## தூநிலாமுற்றம்

ஸ்ரீ ஆண்டாள் சந்நிதிக்கு எதிரில் பரந்து காணப்படும் வடக்குச் சுற்றைப் பெரியாழ்வார் "தூநிலாமுற்றத்தே போந்து விளையாட வானிலா அம்புலீ சந்திரா வாவென்று" என்ற அருளிச் செயல்பகுதியினால் மங்களா சாஸனம் செய்தபடியால் இப் பகுதிக்குத் "தூநிலாமுற்றம்" எனப் பெரியோர்கள் திருப்பெயர்

சூட்டினர். திருஅரங்கத்தில் "அணி அரங்கன் திருமுற்றம்" என்று குலசேகரப்பெருமாளும், திருக்கண்ணபுரத்தில் "நீணிலாமுற்றம்" எனத் திருமங்கை ஆழ்வாரும் மங்களாசாஸனம் செய்துள்ளபடிக்கு இவ்விடத்திய இப்பெரும் முற்றத்தைப் பெரியாழ்வார் "தூநிலாமுற்றம்" என மங்களாசாஸனம் செய்தருளினர். ஆழ்வார்களின் திருவுள்ளப்பாங்கைக்கண்டறிந்தமெய்ஞானிகளான பெரியோர்கள் திருவரங்கத்தை மேலைவீடு என்றும், திருக்கண்ணபுரத்தைக் கீழையவீடு என்றும், இந்தத்தலத்தை நடுவீடு எனவும் அழைப்பதும் இப்பான்மை கொண்டே. இவ்வடக்குச் சுற்றில் ஸ்ரீ ஆண்டாள் சந்நிதிக்குநேர் எதிர்புறம் கிழக்குக்கோடியில் பெரியாழ்வார் சந்நிதியுள்ளது.

## முதல் சுற்று

ஸ்ரீ வைணவமரபில் கருவறைச்சுற்றைத் "திருவுண்ணாழிப் பிரகாரம்" என்று அழைப்பதற்கு இணங்க, இத்தலத்தில் இம்முதல் சுற்றைத் திருவுண்ணாழி என அழைப்பார்கள். அச்யுத பூபால மண்டபத்தின் வழியாகப் பெருமாள் சந்நிதியை நோக்கிச் சென்றால், எதிரே துவாரபாலகர் வாசல் தென்படும். இவ்வாசலுக்குத் தென்புறம் கோடியில் நாச்சியார் சந்நிதியை நோக்கிய வண்ணம் ஸ்ரீ ஐயா குமாரதாத தேசிகன் சந்நிதியும், அருகே வடக்குப்பக்கம், திருக்கண்ணாடி அறையும் உள்ளன.

## நாச்சியார் சந்நிதி

இச்சுற்றில், பெருமாள் சந்நிதி தக்ஷிணாயன வாசலுக்குப் பக்கம் கிழக்குமுகமாக கோமளவல்லித் தாயார் சந்நிதியுள்ளது உள்ளே கருவறையில் அருள் உள்ளம் பூக்கப்பக்தர்களை வா வா என்றழைக்கும் திருக்கண்களுடன், புன்னகை கொண்ட பொலிவுடன் அனைத்துலகத்தின் தாயாம் கோமளவல்லி நாச்சியார், மூலவர் – உத்ஸவர் என்ற இருதிருக்கோலத்துடன், திவ்யாபரணங்கள் ஜ்வலிக்க எழுந்தருளியுள்ளாள். இங்குத் தாயார் தீர்த்தபேரரும் எழுந்தருளியுள்ளாள். மெல்லிய பொன் கொடிபோல் நாச்சியார் தரிசனம் தருகிறபடியால் நாச்சியாருக்குக் கோமளவல்லி என்ற திருநாமம் என்பதை.

**கோமளஸ்வர்ணவல்லீவ த்ருச்யதே மனுஜைரபி!**
**தஸ்மாத் கோமளவல்லீதி ஸர்வலோகேஷு விச்ருதா'**

என்று கும்பகோண மாகாத்மியம் கூறிற்று. இத்தாயார் பக்தர்களின் விருப்பங்களை எல்லாம் வேண்டியது வேண்டியவாறு நிறைவேற்றித் தருகிறாள் என்பதை யாவரும் அறிவார்கள். ஆனபடியால், இந்தச்சன்னிதியில் நாள்தோறும் சிறப்பாக வெள்ளிக்கிழமைகளிலும் பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வந்து ஸ்ரீ கோமளவல்லி நாச்சியாரைத் தரிசனம் செய்கிறார்கள்.

## மெய்க்காவலிடையர்

தாயார் சந்நிதியை வலம் வந்து, பெருமாள் சந்நிதியின்மேல் புறம் வந்தால், அங்கு மேல்புறம் உள்ள மேடையில் ஒரு பக்தரின் வடிவம் தென்படும். ஒரு காலத்தில் கோயிலுக்கு ஆபத்து ஏற்படவே இக்கோயிலையே வைக்கோலால் மறைத்துவைத்துக காப்பாற்றினவர் இவர் என்பதுபற்றி, பெருமாளும், தாயாரும் திருத்தேர் விட்டு எழுந்தருளி, தீர்த்தவாரி ஆனதும், அவரவர் திருநாளில் இந்தப் பக்தரின்படிவத்துக்கு முன் எழுந்தருளி தரிசனம் தந்தார்களாம். அவ்வழக்கம் இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது :

## பாதாள ஸ்ரீநிவாஸன் சந்நிதி

வடக்குச் சுவற்றின் மேற்குக் கோடியில் பெரிய திருமஞ்சன மண்டபம் (ஜ்யேஷ்டாபிஷேக மண்டபம்) உள்ளது. இச்சுற்றின் வடக்குப் பக்கத்தில் கீழே இறங்கும்படியாய் அமைந்த 7, 8 படிகள் கொண்ட பள்ளத்தில், கிழக்கு நோக்கி ஸ்ரீநிவாஸப் பெருமாள் தரிசனம் தருகிறார். இவர் பள்ளத்தில் எழுந்தருளி இருப்பதால், இவரைப் பாதாள ஸ்ரீநிவாஸன் என்று அழைக்கிறார்கள். திருச்சானூர் (திருப்பதி) பத்மாவதித் தாயாருக்குப் பயந்தவர் போல், திருவேங்கடமுடையான் இங்குவந்து, பாதாளத்தில் மறைந்து சேவைத் தருகிறார் என்ற புராணக் கதை படிக்கு "இவரே திருப்பதி ஸ்ரீநிவாஸன்" என்று கூறுவார்கள். இவர் மிகவும் வரப்பிரசாதியாய் விளங்குகிறார். இந்தச் சந்நிதிக்கு எதிரில் பெருமான் திருவடியின் அருகில் கோபுர தரிசனம் செய்து கொண்டிருக்கும் அமைப்பில் ஓர் மன்னர் சிலை தென்படும். இவர் கோபுரத் திருப்பணிக்கு உதவிய அரும்பக்தராவார். பாதாள ஸ்ரீநிவாஸன் சந்நிதிக்குக் கிழக்கே தெற்கு முகமாக ஸேனை முதலியார் சந்நிதியும் உள்ளது. இதே வரிசையில் உபய நாச்சியாருடன், மூலஸ்தானத்தில் ஸ்ரீநிவாஸன் சன்னிதி உள்ளது. இவரே மேட்டு ஸ்ரீநிவாஸன் என அழைக்கப்படுவார். இங்கே

யுகாதி ஆஸ்தான மண்டபம், திருப்பள்ளி அறை, சித்திர ஸ்ரீநிவாஸன் சந்நிதி முதலியன உள்ளன. இம் மண்டபத்திலே கீழ்க் கோடியில், இப்பொழுது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் முயற்சியால் அமைக்கப்பட்ட அழகான கண்ணாடி அறை உள்ளது.

## அமுதன் சந்நிதி

இங்கு எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் விமானத்திற்கு வைதிக விமானம், ஸோமச்சந்த விமானம் எனவும் பெயர்களாகும். சக்கரங்களும், குதிரை, யானைகளும் பூட்டப்பட்டு ஓடிவருவது போன்ற காட்சியுடன் கூடிய விமானமிது. இவ்விமானம் கோபுர அமைப்பில், உச்சியில் மூன்று பொற்கலசங்களுடன் விளங்குகிறது. வைகுந்த விமானம், பிரணவாக்ருதி விமானம், வைதிக விமானம் என்ற மூன்றும் ஒன்றே என்றும் பெரியோர்கள் கூறுகிறார்கள்.

இப்புண்ணிய விமானத்தைச் சுற்றிலும் பலவடிவில் நரசிம்மன் உருவங்கள், உலகளந்த பெருமாள், பரமபதநாதன், கஜேந்திர வரதன், வேணுகோபாலன் முதலிய எம்பெருமான்களின் வடிவங்கள் உள்ளன. இந்த வைதிக விமானத்தின் தென்புறமும், வடபுறமும்தான் கருவறை நுழைவாயில்கள் உள்ளன. இவைகளை முறையே தக்ஷிணாயன வாசல், உத்தராயண வாசல் என அழைப்பதுண்டு. தக்ஷிணாயன தேவதையும், உத்தராயண தேவதையும் நுழைவாயிலாக எழுந்தருளி இருப்பதால் இவ்விருவாசல்களுக்கும் மேலே இரு தனிக் கோபுரங்கள் உள்ளன. பக்தர்களிடையில் தக்ஷிணாயனத்தின் சிறப்புக் குறைந்திருந்தபடியால், அத்தேவதை அமுதனை அடிபணிந்து உத்தராயணத்தைப்போல் தனக்கும் சிறப்பு ஏற்படவேண்டும் எனவேண்ட எம்பெருமான் அத்தேவதையின் வேண்டுதலைத் தலைக்கட்டிக் கொடுத்தார். ஆதலால் குடந்தையில் தக்ஷிணாயனத்தில் இறந்தவர்களுக்கும் மோக்ஷம் உண்டு என்பார்கள். ஆதலால்தான் "அயனத்விதயோத்க்ராந்த, ப்ராணி மோக்ஷப்ரதாயகாயநம:" என்ற திருப்பெயரால் இன்றும் சார்ங்கராஜாவை அருச்சிக்கிறார்கள். மற்றும் பெருமாள் கோமளவல்லித் தாயாரைக் கல்யாணம் செய்து கொள்ளத் தெற்கு வாயிலாக வந்தபடியால் இவ்வாயிலுக்குக் கல்யாண வாயில் எனவும் பெயர். இரு வாசல்களுக்கும் 9 படிகள் உள்ளன. ஆடி முதல் மார்கழி வரை தக்ஷிணாயன வாசல் அதாவது தெற்கு வாசல் திறந்திருக்கும். தை முதல் ஆனி முடிய

வடக்கு வாசல் திறந்திருக்கும். உத்தராயண வாயிலின் வழியாகச் சந்நிதிக்குப் போகும்பொழுது இடையே வடக்கு முகமாக வெண்ணெய் அனுமார் எழுந்தருளியுள்ளார். இவர் மிகவும் வரப்பிரசாதியாய் விளங்குகிறார்.

## திருமாமணி மண்டபம்

கருவறைக்கு எதிரில் பெரிய திருவடியாகிய கருடன் எழுந்தருளியுள்ளார். இங்குப் பெருமாளின் துவாதசாக்ஷர மகாமந்திரத்தின் 12 எழுத்துக்களும் தூண்களாக அமைந்தனவோ என எண்ணும்படியாகப் பன்னிருதூண்கள் கொண்ட பெரிய மண்டபம் பெருமாள் கருப்பகிரகத்துக்கு எதிரில் விளங்குகின்றது. இதற்குத் திருமாமணி மண்டபம் எனப்பெயராகும். இம்மணி மண்டபத்தைப் பற்றிய ஒரு புராணக்கதையும் வழங்கப்பட்டு வருகிறது. அது:-

முன்பு ஸ்ரீ வைகுண்ட விமானம், வைதிக விமானம், பிரணவாக்ருதி விமானம் என்ற மூன்று மண்டபங்களைப் பெருமாள் ஏற்படுத்தினார். அம்மூன்றிலும், ஸ்ரீ பரமபதநாதன், ஸ்ரீ சார்ங்கராஜன், ஸ்ரீ ரங்கராஜன் என்ற மூன்று திவ்விய மங்கள விக்கிரகங்கள் முறையே எழுந்தருளினர். (இம் மூவரும் ஒருவரே) பிறகு இவ்வைதிக விமானம் இக்ஷ்வாகு வமிசத்து அரசர்களின் ஆராதனையில் இருந்து இத்திருக்குடந்தைக்குப் பெருமாளுடன் வந்தது என்பதே. "செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை" என்றும், "பொன்னிமணி கொழிக்கும் திருக்குடந்தை" என்றும், ஆழ்வாரின் அருளிச்செயலானதால் இம்மண்டபத்தையும் "திருமாமணி மண்டபம்" என அழைத்தனர் என்றும் கூறுவர்.

## அமுதன் திவ்விய-தரிசனம்

திருமாமணி மண்டபத்தினின்றும் பக்தியும், அனுபவமும் தழைத்திடும் உள்ளத்துடனும், ஒரே நோக்குடனும் உள்ளே சென்றால், என்னப்பன்! என்னமுது!! என் ஆருயிர்!!! என் ஆசைக்கனி!!!! என்றெல்லாம் வாய்விட்டலறிப் பக்தப் பெருமக்கள் கண்ணீர்வெள்ளமிட உள்ளம் உருகிக் கண்டு களிக்கும் எம்பெருமான் திருக்கடைக்கண்மலர்ந்து திருவுள்ளம் உகந்து தரிசனம் தருவார்.

இங்குக் கருவறையில் அர்த்த மண்டபம் என்று தனித்து உணரும்படிக்கு ஒரு மண்டபம் கிடையாது போலும். அமுதன் திருமேனியின் அருகே நின்று நாம் பெருமாளுடன் ஸமஸ்தானத்தில் நின்று பெருமானை அனுபவிக்கலாம். மூலவர் இருபுஜங்களுடன், வலது திருக்கையைத் தம் திருமுடியின் கீழ் இட்டு, இடது திருக்கையைத் தம் முழந்தாளில் வைத்து கிழக்கே திருமுக மண்டலம் இட்டு பாம்பணைமேல் உத்தான அல்லது உத்தியோக சயனத்தில் பள்ளிகொண்டு விளங்குகிறார். திருமழிசைப்பிரான் இப்பெருமானை எல்லையற்ற ஆர்வத்துடன் தரிசனம் செய்யவந்து, எம்பெருமானுடைய எளிமையை நாட்டாருக்கு எடுத்து விளக்கத் திருவுள்ளம் கொண்டவராய், ''நடந்தகால்கள் நொந்தவோ'' என்று அடிதொடங்கும் திருச்சந்த விருத்தப் பாசுரத்தில் 61 ''எழுந்திருந்து பேசு'' என்று மங்களாசாஸனம் இட்டதும், பக்தபராதீனனான பரமபுருஷன் ஸ்ரீ அமுதன் ஆழ்வார் சொன்ன வண்ணமே கிடக்கை விட்டு அருச்சர் நிலையைத்தாண்டி திருமுடி அழகுடன் எழுந்திருக்கத் தொடங்கவும், ஆழ்வார் எம்பெருமானுடைய எளிமையை நினைத்து நினைத்து மனமுருகி, ஏரார் கோலம் திகழக் கிடந்தவனை ''வாழி கேசனே'' என்று மங்களாசாஸனம் செய்தபடியால் இவரைச் சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்றும் கூறுவதுண்டு: எழுந்திருக்கும் கோலத்துடன் திவ்விய தரிசனத்தைத் தருவதால் இந்த சயனத்தை உத்தான அல்லது உத்தியோக சயனம் எனவும் அழைப்பார்கள் :- இப்பெருமானுக்கு ''ஆராவமுது'' என்று நம்மாழ்வார் திருப்பெயரிட்டார். அமுதன் என்ற சொல்லைவிட ''அமுது'' என்ற சொல்லில் ஒரு புடையில் சுவை அதிகம் காணலாம் அன்றோ! இதே பெயரை வடமொழியில் ''அபர்யாப்தாம்ருதன்'' என்று அழைப்பார்கள். அப்பொழுதைக் கப்பொழுது என் ''ஆராவமுதமே'' என்பது நம்மாழ்வார் திருவாக்கு. அதனை ஒட்டி எத்தனை தடவை தரிசித்தாலும், அனுபவித்தாலும் இவருடைய கொள்ளமாளா இன்ப வெள்ளமான திருமேனி அழகும், திருக்குணங்களின் பெருமையும் திகட்டாத அமுதமாகவே இருக்கும் என்பது ''ஆராவமுது'' என்ற சொல்லின் பொருளாகும்.

மேலும் இவ்வெம்பெருமான், ஒருக்கால் ஆழ்வார்களின் அருளிச்செயல் பாசுரங்கள் அடங்கிய நாலாயிர திவ்வியப் பிரபந்தம் வழக்கொழிந்து மறைந்து நின்று, அவ்வப்பொழுது நம்மாழ்வார் அருளிச்செய்த ''ஆராவமுதே'' என்ற பதிகத்தை மட்டிலும் எம்பெருமான் தன் சந்நிதியில் அருளிச் செயல்

கோஷ்டியில் அநுசந்தித்து அழியாமல் காத்து, வழக்கில் வைத்திருந்தார்கள். பிறகு நாதமுனிகள் என்ற ஆசாரிய வள்ளலின் திருச்செவியில் இப்பதிகத்தைச் செவிபடச் செய்து, நம்மாழ்வார் யோகதசையில் நாதமுனிகளுக்கு நாலாயிரம் பாசுரங்களையும் உபதேசிக்க அந்நாதமுனிகள் மூலம் நிலவுலகில் அம்ருத வெள்ளமான திவ்வியப் பிரபந்தத்தை நாலாயிரமாக வகுக்கவும் இப்பெருமாளே வழிசெய்தபடியால் பெரியோர்கள் இப்பெருமானை "ஆராவமுதாழ்வார்" என்றே திருப்பெயரிட்டு அழைக்கத் தொடங்கினர். ஸ்ரீ அமுதன் இவ்வாறு அருள் பாலிக்காவிடில் ஸ்ரீ வைணவ சம்பிரதாயத்திற்கோர் பற்றுக்கோலாக அமைந்தப் பிரபந்தங்கள் அழிந்தே போயிருக்கும். அதனால்தான் இன்றும் "திராவிடசுருதிதர் சகாயநம:" என்று இப்பெருமானுக்கு ஒரு திருநாமம் அவரது அருச்சனையில் அமைந்துள்ளது.

இப்பெருமானுக்கு இருபக்கங்களிலும் ஸ்ரீ தேவியும், பூதேவியும் கீழே மண்டியிட்டு எழுந்தருளியுள்ளார்கள். இவரைச் சுற்றிலும் 33 கோடி அமரர்குழாம் துதிசெய்து கொண்டிருக்கிறது. திருநாபியின் கமலத்தில் பிரமன் எழுந்தருளி எம்பெருமானைத் துதிசெய்து கொண்டிருக்கிறார். பெருமாளின் திருமுடிப்பக்கம் ஸப்தரிஷிகளும், திருவடிவாரத்தில் ஏழுபுண்யநதிகளின் தேவதைகளும் துதிக்க, ஹேமமகரிஷிக்கும், திருமழிசைப் பிரானுக்கும் தரிசனம் தந்தபடி சயனித்திருக்கிறார். இங்கு கருவறை அமைப்பு விசித்திரமானது. தமது திருப்பெயரான "பிரான்" என்ற திருநாமத்தை திருமழிசை ஆழ்வாருக்குச் சூட்டி மகிழ்ந்த பெருமானும் இவரே. "ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்" என்று நம்மாழ்வார் இவரை அனுபவித்தபடியாகும்.

## சார்ங்க ராஜன்

மூலவருக்கு முன்புறம் "நாற்றோள் எந்தாய்" என்று ஆழ்வார் மங்களாசாஸனம் இட்டபடிக்கு, பஞ்சாயுதங்களுடனும் சிறப்பாக என்றும் நீங்காத "சார்ங்கம்" என்ற வில்லுடன் "சார்ங்கபாணி" என்ற திருப்பெயருடன், உத்ஸவர் "கண்டேன்! கண்டேன்! கண்டேன்! கண்ணிற்கினியது கண்டேன்" என்று பக்தர்கள் பாசுரம் இடும்படி எங்கும் காணக் கிடைக்காத பேரழகு வழியும் திவ்விய சௌந்தரியத்துடன் தரிசனம் தருகிறார். உண்மையில் இவ்வருச்சாப் பிம்பத்தின் அழகு எங்கும் காணக் கிடைக்காதது நேரில் தரிசித்தவர்களுக்குத்தான் அவ்வின்பம் முழுமையும் அனுபவிக்க இயலும்.

"அருச்சையில் ஐந்து பேரம்" என்றபடிக்கு, இக்கோயில் உத்தமபூஜையுடன் கூடின திவ்வியத் தலமானதால் யாக, பலி, ஸ்னான, சயனபேரங்களும் ஆஸ்தானத்தில் எழுந்தருளியுள்ளார்கள். புத்திர பாக்கியம் தரும் ஸ்ரீ சந்தானகோபாலனும் சேஷசாயியாக தரிசனம் தருகிறார். இத்தலத்துப் பெருமாள்களான மூலவருக்கும், உத்ஸவருக்கும் தனித்தனி ஆழ்வார் மங்களாசாஸனம் ஏற்பட்டிருக்கிறபடியால் இத்தலம் "உபயப்பிரதான க்ஷேத்திரமாகும்." ஸ்ரீ திருக்குடந்தை தேசிகன் என்ற மகானும் இவ்வெம்பெருமானை அணைத்துக் கொடுத்தார் என்ற வழக்கிற்கிணங்க, இவர் பாகவத கரஸ்பரிசம் பெற்ற பெருமாளாகிறார். இவ்விரண்டு எம்பெருமான்களையும் பக்தி ததும்ப வழிபட்டு இன்னருள் பெறுவோமாக!!



# 3. திருக்குடந்தை (பழைய சிறப்பு)

கும்பகோணம் என்று புகழ்பெற்ற இத்திருக் குடந்தையைப் பற்றிப் பல பழம் புராணங்கள் மிகவும் சிறப்பித்துக் கூறுகின்றன. இதனை ஸ்வயம் வ்யக்தத்தலம் என்று பவிஷ்யோத்தர புராணம் கூறுகிறது. ஆழ்வார்கள் எழுவர் பாடிய மிகவும் சிறந்ததொரு திவ்வியதேசமாகும். கும்பகோணம் என்று பெயர் ஏற்பட்ட காரணம் பின்வருமாறு :

முன்பு பிரமன் ஈசுவரன் ஆணையின்பேரில், பிரளயம் வரப் போவதைக் கருதி, புண்ணியத்தலங்களில் இருந்து மண்ணைக் கொணர்ந்து, அமுதத்துடன் பிசைந்து அதைக் குடமாக அமைத்து, அக்குடத்தில் அமுதத்தை நிரப்பி, அதில் படைப்புக்குக் காரணமான ஒரு விதையை இட்டு நான்கு வேதங்களையும் சுற்றிலும் ரக்ஷையாக இருக்கச்செய்து, மூடிமேருமலையின் உச்சியில் வைத்தார். பிறகு பிரளயம் ஏற்பட, அப்பிரளய வெள்ளத்தில் மிதந்து வந்த இந்த அமுதக்குடம் இக்கும்பகோணத்தில் தங்கியது. பிரளய வெள்ளம் குறையவே இக்குடத்தில் உள்ளே இருந்த அமுதம் குடமுக்கின் வழியாக 10 மைல் அளவுள்ள இப்பூமியில் பரவிற்று. அவ்வாறு அமுதக்குடம் மூக்கின் வழியாக அமுதத்தைப் பெறுக்கிவிட்ட இடமானதால் இந்த இடத்திற்குக் கும்பகோணம் (கும்பம்=குடம் கோணம்=மூக்கு) என்று வட மொழிப்பெயரும் குடமூக்கு, குடந்தை என்று தமிழ்ப்பெயரும் வழங்குவதாயிற்று.

**கும்பஸ்ய கோணதோ யஸ்மிந் ஸுதாபூரம் விநிஸ்ருதம்**
**தஸ்மாத்து தத்பதம்லோகே கும்பகோணம் வதந்தி ஹி''**

என கும்பகோண மகாத்மியம் கூறிற்று.

# 4. பாஸ்கர க்ஷேத்திரம்

இத்தலத்துக்குப் பாஸ்கர க்ஷேத்திரம் என்றும் ஒரு பெயருண்டு. அவ்வாறு பெயர் ஏற்படக் காரணமாவது:

முன்பு "சுதர்சனன்" என்ற திருமாலின் சக்கரத்திற்கும், சூரியனுக்கும் போர் மூண்டது. சூரியன் தோற்று ஒளி இழந்தான் கர்வம் குறைந்த கதிரவன் அமுதன் வலக்கையில் உள்ள ஸ்ரீ சுதர்சனாழ்வானைக் குறித்துப் பல காலம் தவம் செய்தான். பெருமாள் திரு அருளால் கதிரவன் முன்புபோல் ஒளி பெற்று உய்ந்தான். பிறகு அக்கதிரவன் எம்பெருமானிடம் நான் தேவரீர் அருள் பெற்ற தலமாதலால், இந்நகர் என் பெயராலேயே விளங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டான். பெருமாள் திருவுள்ளம் உகந்தார். அன்றையிலிருந்து இந்தப் பதிக்குப் பாஸ்கர க்ஷேத்திரம் எனவும் ஒரு பெயர் ஏற்படுவதாயிற்று. இவ்விபரம் கும்பகோணமகாத்மியத்தில் 61வது அத்தியாயத்தில் கூறப் பட்டுள்ளது.

# 5. கலியாணபுரம்

இந்த ஊருக்குக் கலியாணபுரம் எனவும் பெயர் உண்டு. அதற்குக் காரணம் ஸ்ரீ சார்ங்கராஜனுக்கும் கோமளவல்லி நாச்சியாருக்கும் இத்தலத்திலே கலியாணம் நடந்தேறியபடியால் 'கலியாணபுரம்' என்ற பெயர் ஏற்பட்டதென்று கும்பகோண மாகத்மியத்தில் 52வது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த நகரத்தில் தங்கினாலும், தங்க ஓரடி எடுத்து வைத்தாலும் தங்க நினைத்தாலும் அவனுக்கு மோக்ஷம் நிச்சயம் கை புகுமாம். வேறு இடத்தில் செய்த பாபம் காசிக்ஷேத்திரம் சென்றால் அழியும், காசியில் செய்தபாவம் கும்பகோணத்தில் இருந்தால் போமாம். கும்பகோணத்தில் செய்தபாபம் கும்பகோணத்திலேதான் கழியுமாம்.

ஸ்ரீ கும்பகோணே வஸதாம் நராணாம்
கிமஸ்தி வக்தவ்யபலம் சுபஞ்ச!

நமந்தி தேவா: முநய: சயக்ஷா:
கந்தர்வ முக்யாஸ்ஸததம் முநீச்வர.

இடம்கொண்ட நெஞ்சத்து இணங்கிக்கிடப்பன என்றும்பொன்னித்
தடம்கொண்ட தாமரைசூழும் மலர்ந்த தண்பூங் குடந்தை
விடம்கொண்ட வெண்பல் கருந்துத்தி செங்கட்டழலு மிழ்வாய்
படம்கொண்ட பாம்பணைப் பள்ளிகொண்டான் திருப்பாதங்களே.

-கம்பன்

தானே படைத்து லகைத்தானே அளித்துநீ
தானே அழிக்கும் தளர்ச்சியோ-வானில்
திருமகுடந் தைக்கச்சிறு குறளாய் நீண்ட
பெரும! குடந்தைக்கிடந் தாய் பேசு!

—பிள்ளைப்பெருமாளய்யங்கார்

# 6. சார்ங்கராஜன் எழுந்தருளியது

திருவரங்கம் பெரியபெருமாளும், திருவேங்கடமுடையானும், இத்தலத்து எம்பெருமானும் ஒருவரே என்பது பெரியோர்களின் துணிபு. பண்டு சூரியனும், பிரமனும் பகவானைக் குறித்துத் தவம் செய்தனர். தவத்தினால் மகிழ்ந்த பெருமான்- ஸ்ரீ வைகுந்த விமானம், பிரணவாக்ருதி விமானம், வைதிக விமானம் என்ற மூன்று விமானங்களைப் படைத்து அம்மூன்றினுள்ளும் மூன்று வடிவத்தில் பெருமாள் அமர்ந்தார். முதல் விமானத்தைப் பிரமனுக்கும், மூன்றாவது விமானத்தைச் சூரியனுக்கும் தந்தார். அவர்களும் இவ்விரு விமானங்களுடன் பெருமானை வணங்கி வந்தனர். அதில் சூரியன் மூலமாய் அவன் புத்திரன் மனுவிற்கு வைதிக விமானம் கிடைத்தது. அதனைப் பூலோகத்தில் சரயூ நதிக்கரையில் இட்டு வைவச்வதமனு பூசித்து வந்தான். அப் பரம்பரையில் தோன்றிய இக்ஷ்வாகு என்ற மன்னன், மற்றோர் விமானமாகிய பிரணவாகர விமானத்தைப் பிரமனிடம் இருந்து பெற்று இரண்டையும் பூசித்து வந்தான். இருவிமானங்களும் ஒன்றாகிவிட்டன. கடைசியில் இக்ஷ்வாகு வமிசத்தில் ஸ்ரீ ராமன் வரையில் சூரியகுல தேவதையாக எழுந்தருளி இருந்த இவ்விரு விமானங்களும் ஸ்ரீ ராமன் பட்டாபிஷேகத்துக்குப் பின் பரிசாக விபீஷணனுக்குக் கிடைத்தது. விபீஷணன் அவ்விமானத்தை எடுத்துக்கொண்டு இலங்கை செல்லுகையில் திருவரங்கத்தில் அவ்விமானம் எடுக்க இயலாமல் எம்பெருமான் திரு அருளால் அமைந்துவிட்டது. அப்பொழுது விபீஷணனிடம் திருஅரங்கன் கூறியபொழுது-இதில் இருந்து பிரிந்து முன்போல் தனித்து விளங்கும், வைதிக விமானத்துடன் நான் திருக்குடந்தையில் எழுந்தருளி இருக்கப்போகிறேன் என்று கூறினார். அதனால் இந்த விமானத்தின் மூலம் திருவரங்கப் பெருமானே இங்கு எழுந்தருளினார் என்ற வரலாறு அறியக்கிடக்கிறது.

மேலும், பிருகு என்ற முனிவர் "பரதேவதையார்" என்றறியப் புறப்பட்ட சமயத்தில் திருமால் திருமார்பில் உதைத்த மாபெரும் அபசாரத்தை நினைத்து வருந்தி மறுபிறவியில் ஹேமமுனிவராகப் பிறந்து மேருமலையில் எம்பெருமானைக்

குறித்துத் தவம் செய்தார். பெருமான் எதிரில் தோன்றவே, அவர் திருவடியில் விழுந்து வணங்கி, தனது குற்றத்தைப் பொறுத்தருளவேண்டி, எம்பெருமானுடைய தேவியான திருமகளைத்தான் பெண்ணாக அடையவேண்டினார். பெருமானும் இசைந்து "முனிவரே! காவிரி ஆற்றங்கரையில், பிரமன் என்னை வழிப்பட்ட வனத்தின் நடுவில் பொற்றாமரை என்ற புஷ்கரணியில் ஆயிரம் இதழ்கொண்ட தாமரையில் அமர்ந்து, மகாலக்ஷ்மி யானவள் என்னை நினைத்துக் கோமளவல்லி என்ற திருப் பெயருடன் தவம் செய்கிறாள். அங்குச் சென்று அத்திருமாமகளைப் பெண்ணாகக்கொண்டு காத்துவாருங்கள். எல்லாம் நினைத்தபடியே நிறைவேறும்" என்று கூறி மறைந்தார். ஹேமமுனிவரும் எம்பெருமான் கட்டளைப்படிக்கே, பொற்றாமரைப் புஷ்கரிணியை அடைந்து கோமளவல்லித் தாயாரைக்கண்டு, மகிழ்ந்து அவளைப் புத்திரியாகப் பாவனை செய்து வளர்த்து வந்தார். நாள்தோறும் அக்குளத்தின் வடகரையில் பாரிஜாத மரத்தடியில் அமர்ந்து எம்பெருமான் எழுந்தருளும் நன்னாளை எதிர்பார்த்திருந்தார். எம்பெருமான் திருவுள்ளம் கூடவே, திருவரங்கவப்பன் தமது பிரணவாகார விமானத்தினின்று, இதுவரை சேர்ந்திருந்த ஸோமச்சந்த விமானம் என்ற வைதிக விமானத்தைப் பிரித்து, அதில் தான் சார்ங்கராஜாவாக எழுந்தருளிப் புறப்பட்டு, திருக்குடந்தை அடைந்து, தைமாதப் பிறப்பன்று, நடுப்பகல் வேளையிலே விருஷப லக்கினத்தில், பொற்றாமரை புஷ்கரிணிக் கரையில் ஹேமமகரிஷிக்கும், ஸ்ரீ கோமளவல்லித் தாயாருக்கும் தரிசனம் தந்தருளினார். அப்பொழுது ஸ்ரீ கோமளவல்லித் தாயாரைத் தன் திருமார்பில் ஏற்றும், மற்றொரு உருவத்துடன் ஹேமமகரிஷி தன் புத்திரியான கோமளவல்லியைத் திருமணம் செய்விக்கத் திருமணம் செய்துகொடுக்கவும் அருள்புரிந்தார். முனிவர் வேண்ட, தாயாருடன் இத்தலத்திலேயே பக்தப்பெருமக்களுக்குத் தரிசனம் தந்தருளிக்கொண்டு இருக்கிறார். முனிவரும் எம் பெருமானுக்குத் திருக்கோயில் கட்டி, உத்சவம் கண்டருளச் செய்து, தீர்த்தவாரியையும் இப்புஷ்கரிணியில் நடத்திவைத்து அங்கேயே அமுதன் பணியிலும், தரிசனத்திலும் ஈடுபட்டுப் பல கால் எழுந்தருளி இருந்தார். இந்தத் தைமாத உத்சவத்திற்குப் பின், பிரமன் முதலியோர் எழுந்தருளிச் சித்திரையில் சித்திரை நக்ஷத்திரத்தில் திருத்தேர் உத்சவம் அமையும்படி அவர்கள் சித்திரைப் பெருவிழாவையும் நடத்திவைத்தனர்.

# 7. ஸ்ரீ பாதாள ஸ்ரீநிவாஸன்

பிருகு முனிவர் பெருமாள் திருமார்பில் உதைத்ததைக்கண்டு கோபமுற்றவளாய் திருமகள் கொல்லாபுரம் சென்று அங்கு மழைபொழியச் செய்து அங்கேயே சிலநாள் எழுந்தருளி இருந்தாள். பெருமாளும் திருமகளைத் தேடிக்கொண்டு திருப்பதிப் பக்கம் வரவும், அங்கு ஆகாசராஜன் மகளான பத்மாவதியைத் கண்டு மணந்து அங்கேயே ஸ்ரீநிவாஸன் என்ற திருப்பெயருடன் எழுந்தருளி இருந்தார். நாரதர், பெருமானும் தாயாரும் திருக்குடந்தைக்கு எழுந்தருளி ஸேவைதந்தருளவேண்டும் என்ற எண்ணம் கொண்டவராய், கொல்லாபுரத்துக்குச் சென்று அங்குள்ள திருமகளிடம், பெருமான் ஆகாசராஜன் புதல்வியான பத்மாவதியை மணந்து திருப்பதியில் எழுந்தருளி இருக்கும் நிகழ்ச்சியைக் கூறித் தாயாருக்குக் கோபம் ஏற்படச் செய்தார். திருமகளும் அந்த ஊரை விட்டகன்று விட்டாள். இச்செய்தியைப் பெருமாளிடமும் நாரதர் தெரிவிக்க, தாயார் திருப்பதிப் பக்கம் வருவதை உணர்ந்த பெருமாளும் தாயாரிடம் பயந்தவர்போல் அபிநயித்துக் கும்பகோணம் வந்து ஒரு புதரின் பாதாளத்தில் எழுந்தருளி மறைந்தார். தனது ஒரு அம்சத்தை திருப்பதியில் வைத்துவிட்டுக் கும்பகோணத்திற்கு வரும்பொழுது திருமகள் அவரைக் கண்டு பின்பற்றினாள். பாதாளத்தில் எம்பெருமான் மறைந்திருப்பதை அறியாத திருமகள், கோபம் களைந்து அப்பெருமானை அடைய விரும்பி, கும்பகோணம் பொற்றாமரையில் தவம் செய்து, கடைசியில் அவ்வெம்பெருமானை மணந்தாள் என்ற வரலாறும் கூறப்படுகிறது. இதனால் திருப்பதி ஸ்ரீநிவாஸனே சார்ங்கராஜா என்றும் அறியக்கிடக்கிறது. மேலும் ஸ்ரீ வேதாந்த தேசிகன் இயற்றிய திருப்பதி ஸ்ரீநிவாஸன் விஷயமான "தயாசதகம்" என்ற நூலில் ஸ்ரீநிவாஸனை "சார்ங்கதன்வா" என்றே அழைக்கும் வாயிலாய் திருவேங்கடமுடையானும், ஸ்ரீ அமுதனும் ஒரு பிம்பாகிருதியாகவும் ஒன்றே என்றே திருவுள்ளம் பற்றினர் என்பர் பெரியோர்.

❋

# 8. ஸ்ரீ லக்ஷ்மி நாராயண சுவாமி

இவர் அமுதனிடம் அளவிடாப் பற்றுள்ள ஒரு பரமபக்தர், பெருமாள் கோயில் கோபுரம் முதலிய திருப்பணிகளைச் செய்தவர். முன்பு ஒரு பக்தன் தம்பதிகள் அமுதனிடம் வேண்டிக்கொள்ள இம்மகான் அமுதன் திருவருளால் அத்தம்பதிகளுக்குப் பிள்ளையாய் அவதரித்தார். அந்தத் தம்பதிகள் எம்பெருமானிடம் முன்பு வேண்டிக்கொண்ட படிக்கே இருவரும் பிள்ளையைப் பெருமாள் கைங்கரியத்துக்கே அர்ப்பணித்து விட்டனர். இவ்வரும் குழந்தையின் பெற்றோர்கள் ஸேதுவிலிருந்து ஊர்திரும்பும் பொழுது, அவர்கள் வழிதவறிவிட்டகலக் குழந்தையின் கண் தெரியாமல் போயிற்று என்றும், பின் குழந்தை ஒருவாறு குடந்தையை வந்து சேர்ந்ததும் இக்குழந்தைக்குக் கண்பார்வை வந்ததென்றும் சொல்வார்கள். இவரும் பலர் உதவியைக் கொண்டும், தனது சொத்துக்களைக் கொண்டும் எம்பெருமான் கைங்கரியத்துக்கே தம்மை அர்ப்பணித்தும், பல திருப்பணிகளைச் செய்து, கடைசியில் அமுதன் திருவடி நிழலை அடைந்தார்.

இவரது பின்குறிப்பு பக்கம்-9 பத்தி-23 காண்க.



# 9. பயன்

ஸ்ரீ சார்ங்கராஜாவின் பெருமையை, இக்கலியுகத்தில் எவர்கள் சொல்லுகிறார்களோ? கேட்கிறார்களோ? அவர்களுக்கு ஸ்ரீ கோமளவல்லியுடன் கூடிக் களிக்கும் ஸ்ரீ சார்ங்கராஜா எல்லா அபீஷ்டங்களையும் தந்து காத்தருள்வான் என்ற கருத்துக் கொண்ட தலபுராணச் செய்யுள் :-

ஸ்ரீ சார்ங்கபாணே : விபவம் சுபாஸ்பதம்
யேச்ராவயந்தீஹ கலௌயுகேபரம் !

ச்ருண்வந்தி தேஷாம் அகிலேஷ்டதாயீ
பவத்பஸௌ சார்ங்கதர : ப்ரியாயுத : !!



# 10. ஈடுபாடு

ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் 54ம், மடல்களில் சில கண்ணிகளும் இப்பெருமாள் விஷயமாக அமைந்தவை. இவைகளைத்தவிரவும் ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தேசிகனும் ஆங்காங்கு சார்ங்கராஜாவையும், அமுதனையும் நினைந்து நினைந்து, மற்றையப் பாசுரங்களின் இடையே மங்களாசாஸனம் செய்துள்ளார். சிறப்பாக அரங்கன் பாதுகாவிஷயமான பாதுகாஸஹஸ்ரத்தில் பல இடங்களில் சார்ங்கராஜாவின் பாதுகையே என்றும் குறிப்பிடுகிறுர். ஆழ்வார்களில் தலைவரான நம்மாழ்வார் திருநாட்டுக்கு எழுந்தருளும் சிறப்பினை உணர்த்தும் "சூழ்விசும்பணி முகில்" என்ற திருவாய்மொழி (10 – 9) திருப்பதிகத்தில் இத்திருமொழி எந்த திவ்ய தேசத்து எம்பெருமானைப்பற்றியும் குறிக்காத நிலையிலும் 7ம் பாசுரத்தில்,

**மடந்தையர் வாழ்த்தலும் மருதரும் வசுக்களும்**
**தொடர்ந்து எங்கும் தோத்திரம் சொல்லினர் – தொடுகடல்**
**கிடந்த எங்கேசவன் கிளரொளி மணிமுடி**
**குடந்தை எங்கோவலன் குடிஅடி யார்க்கே.**

என்ற அருட்செயலால், திருநாட்டிலும் குடந்தை எம்பெருமான் பக்தர் என்ருல் ஒரு தனிச் சிறபபுண்டு என்று குறிப்பிட்டார். அதனுல் நம்மாழ்வாருக்கு இப்பெருமாளிடம் அளவற்ற ஈடுபாடு என்பதும் விளங்கும். மற்றும் திவ்வியதேசத்து எம்பெருமான்கள் யாவரும் ஆழ்வார் திருநகரில் ஆழ்வார் எழுந்தருளி இருந்த புளியமரத்தின் இலையில் ஆழ்வாருடைய பாசுரத்தில் காத்திருக்க ஆழ்வார் அமுதனை மட்டும் தனியாக.

**" அசைவில் உலகம் பரவக்கிடந்தாய் காணவாராயே "**

என்று அழைத்த சிறப்பும் அமுதன் பெருமைக்கு முத்தாய்ப்பாகும். அதேபோல் அமுதனை நம்மாழ்வார் போல் உண்ணும் சோருகவும் பருகுநீராகவும் கருதி இருந்த இவரிடம் திருமங்கைஆழ்வார் முதன் முதலில் திருமணக்கொல்லையில் எழுந்தருளிய திவ்விய தம்பதிகளான லக்ஷ்மி – நாராயணன் இவர்களிடம் திருமந்திரோபதேசம் பெற்றதும், உடனே "ஆவியே! அமுதே" என இப்

பெருமானை அழைத்து "வாடினேன் வாடி" என்ற முதற்பதிகத்திலேயே ஏழாம் பாசுரத்தில் "இற்பிறப்பு அறியீர்" என்று தொடங்கும் பாசுரத்தில் "சூழ்புனற் குடந்தையே தொழுமின்" என்றருளிச் செய்தார். இப்பதிகம் ஒரு திவ்விய தேசத்தைப் பற்றியது அல்ல. அப்படி இருக்க இப்பதிகத்தில் இவ்வெம்பெருமானைத் திருமங்கை ஆழ்வார் நினைத்தார் என்றார். இவரிடம் பரகாலனுக்கு உள்ள ஈடுபாடு அளவற்றது என்பது விளங்கும். பொதுவாக ஆழ்வார்கள் எந்த எந்த திவ்விய தேசத்தை எடுத்துப் பாசுரம் இடுவார்களோ ஆங்காங்கு அந்த அந்தப் பெருமாளை மங்களா சாஸனம் செய்வதே இயல்பு. ஆழ்வார்கள் அந்த அந்தத் திவ்விய தேசத்து எம்பெருமான்களை மங்களா சாஸனம் செய்யும் பொழுதெல்லாம், விடாயகற்றிக் கொள்வது போல் அமுதனையே நினைக்கும் அழகை திவ்வியப் பிரபந்தங்களில் பிரபந்த ரசிகர்கள் நன்கு அறிவார்கள்.

ஆழ்வார் பாசுரங்களைத் தவிரவும் கோபாலராய மகாதேசிகன் என்ற திருக்குடந்தை தேசிகன் அபர்யாப்தாம்ருதத்தியான சோபானம் என்ற அரும் நூலையும், நான்கு மங்கள சுலோகங்களையும் செய்தருளினார் என்பர். மற்றும் பல பெரியோர்களும் தற்காலத்தில் பல தோத்திர நூல்களும் இயற்றியுள்ளார்களாம்.

இத்தகைய வைபவங்கொண்ட கோமளவல்லி சமேத ஸ்ரீ சார்ங்கராஜ வள்ளலை நாமும் பக்திசிரத்தையுடன் தினந்தோறும் தரிசித்து உய்வோமாக!

ஸ்ரீ ஆராவமுதாழ்வான்

# மங்களாசாஸனப் பாசுரங்கள்

## 1. பெரியாழ்வார்

கானார் நறுந்துழாய் கைசெய்த கண்ணியும்
வானார் செழுஞ்சோலைக் கற்பகத்தின் வாசிகையும்
தேனார் மலர்மேல் திருமங்கை போத்தந்தாள்
கோனே அழேலழேல் தாலேலோ குடந்தைக் கிடந்தானே
தாலேலோ (1)

*பெரியாழ்வார் திருமொழி முதற்பத்து*

தூநிலாமுற்றத்தே போந்து விளையாட
வானிலாவம்புலீ சந்திரா வாவென்று
நீநிலாநின் புகழாநின்ற ஆயர் தம்
கோநிலாவக் கொட்டாய் சப்பாணி குடந்தைக்கிடந்தானே
சப்பாணி (2)

கொங்குங் குடந்தையும் கோட்டியூரும் பேரும்
எங்கும் திரிந்து விளையாடுமென்மகன்
சங்கம் பிடிக்குந் தடக்கைக்குத் தக்க-நல்
அங்கமுடையதோர் கோல் கொண்டுவா அரக்குவழித்ததோர்
கோல் கொண்டுவா (3)

ஆலத்திலையானரவினணைமேலான்
நீலக்கடலுள் நெடுங்காலங் கண்வளர்ந்தான்
பாலப்பிராயத்தே பார்த்தற்கருள் செய்த
கோலப்பிரானுக்கோர் கோல் கொண்டுவா குடந்தைக்
கிடந்தாற்கோர் கோல் கொண்டுவா (4)

குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்ல வெங்கோவே
மடங்கொள் மதிமுகத்தாரை மால்செய்யவல்ல வென்மைந்தா
இடந்திட்டிரணியன் நெஞ்சை யிருபிளவாக முன்கீண்டாய்
குடந்தைக்கிடந்த வெங்கோவே குருக்கத்திப்பூச் சூட்டவாராய் (5)

## 2. ஸ்ரீ ஆண்டாள்

பாலாலிலையில் துயில்கொண்டபரமன் வலைப்பட்டிருந்தேனை
வேலால் துன்னம் பெய்தாற்போல் வேண்டிற்றெல்லாம் பேசாதே
கோலால் நிரைமேய்த்தாயனாய்க் குடந்தைக் கிடந்த குடமாடி
நீலார் தண்ணந்துழாய் கொண்டு என்னெறி மென்குழல்மேல்
சூட்டீரே (6)

## 3. திருமழிசைப்பிரான்

இலங்கைமன்னனைந்தொடைந்து பைந்தலை நிலத்துக
கலங்க வன்று சென்றுகொன்று வென்றிகொண்ட வீரனே!
விலங்குநூலர் வேதநாவர் நீதியான கேள்வியார்
வலங்கொளக் குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே (7)

சங்குதங்கு முன்கை நங்கை கொங்கை தங்கலுற்றவன்
அங்க மங்க வன்றுசென்றடர்த்தெறிந்த வாழியான்
கொங்குதங்கு வார்குழல் மடந்தைமார் குடைந்த நீர்
பொங்குதண் குடந்தையுள் கிடந்த புண்டரீகனே! (8)

மரம்கெடப் நடந்தடர்த்து மத்தயானை மத்தகத்து
உரம்கெடப் புடைத்தோர் கொம்பொசித்துகந்த வுத்தமா!
துரங்கம் வாய்பிளந்து மண்ணளந்த பாத* வேதியர்
வரங்கொளக்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே! (9)

சாலிவேலி தண்வயல் தடங்கிடங்கு பூம்பொழில்
கோலமாடநீடு தண்குடந்தைமேய கோவலா!
காலநேமி வக்கரன் கரன் முரன் சிரமவை!
காலனோடுகூட விற்குனித்த விற்கைவீரனே! (10)

செழுங்கொழும் பெரும்பனி பொழிந்திட * உயர்ந்தவேய்
விழுந்துலர்ந்தெழுந்து விண்புடைக்கும் வேங்கடத்துள்நின்று
எழுந்திருந்து தேன் பொருந்து பூம்பொழில் தழைக்கொழும்
செழுந்தடங்குடந்தையுள் கிடந்த மாலுமல்லையே ! (11)

நடந்த கால்கள் நொந்தவோ நடுங்க ஞாலமேனமாய்
இடந்த மெய் குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரம்
கடந்தகால் பரந்த காவிரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவா றெழுந்திருந்து பேசு வாழிகேசனே ! (12)

## 4. திருமங்கையாழ்வார்

ஆவியே ! அமுதே ! எனநினைந்துருகி
அவரவர் பணைமுலை துணையா
பாவியேனுணராதெத்தனை பகலும்
பழுதுபோயொழிந்தன நாள்கள்
தூவிசேரன்னம் துணையொடும் புணரும்
சூழ்புனற் குடந்தையே தொழுது, என்
நாவினாலுய்ய நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம் (13)

*பெரிய திருமொழி முதற்பத்து*

இற்பிறப்பறியீர் இவரவரென்னீர்
இன்னதோர் தன்மையென்றுணரீர்
கற்பகம் புலவர் களைகணென்றுலகில்
கண்டவா தொண்டரைப்பாடும்
சொற்பொருளாளீர் சொல்லுகேன் வம்மின்
சூழ்புனற் குடந்தையே தொழுமின்
நற்பொருள் காண்மின் பாடிநீருய்மின்
நாராயணா வென்னும் நாமம் (14)

ஊரான் குடந்தையுத்தமன் ஒரு காலிருகால் சிலைவளைய
தேராவரக்கர் தேர்வெள்ளம் செற்றான் வற்றாவருபுனல்சூழ்
பேரான் * பேராயிரமுடையான் பிறங்குசிறைவண்டறைகின்ற
தாரான் * தாராவயல்சூழ்ந்த சாளக்கிராம மடைநெஞ்சே (15)

அன்றுயர் குலக்கொடியோடு
அணிமாமலர் மங்கையொடன்புளவி * அவுணர்க்கு
என்றுலுமிரக்கமிலாதவனுக்கு
உறையுமிடமாவது * இரும்பொழில்சூழ்
நன்றுய புனல் நறையூர் திருவாலி குடந்தை
தடந்திகழ் கோவல்நகர்
நின்றுனிருந்தான் கிடந்தான் நடந்தாற்கிடம்
மாமலையாவது நீர்மலையே (16)

வாளாய கண்பனிப்ப மென்முலைகள் பொன்னரும்ப
நாளுளும் நின்னினைந்து நைவேற்கு * ஓ மண்ணளந்த
தாளாளா! தண்குடந்தை நகராளா! வரையெடுத்த
தோளாளா! என்றனக்கோர் துணையாள ளுகாயே (17)

குயிலாலும் வளர்பொழில்சூழ் தண்குடந்தைக் குடமாடீ!
துயிலாத கண்ணிணையேன் நின்னினைந்து துயர்வேனே!
முயலாலு மிளமதிக்கே வளையிழந்தேற்கு * இதுநடுவே
வயலாலி மணவாளா! கொள்வாயோ மணிநிறமே (18)

வாராளுமிளங்கொங்கை வண்ணம்
வேருயினவாறெண்ணுள் * எண்ணில்
பேராளன் பேரல்லால் பேசாள்
இப்பெண் பெற்றேனென் செய்கேன் நான்
தாராளன் தண்குடந்தை நகராளன்
ஐவர்க்காயமரிலுய்த்த
தேராளன் * என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம் நான் செப்புகேனே (19)

பொங்கேறு நீள்சோதிப் பொன்னுழி தன்னேடும்
சங்கேறு கோலத்தடக்கைப் பெருமானைக்
கொங்கேறு சோலைக் குடந்தைக்கிடந்தானை
நங்கோனை நாடி நறையூரில் கண்டேனே (20)

கிடந்த நம்பி குடந்தைமேவி கேழலா யுலகை
யிடந்த நம்பி * எங்கள் நம்பி எறிஞரரணழிய
கடந்த நம்பி கடியாரிலங்கை உலகை யீரடியால்
நடந்த நம்பி நாமம் சொல்லில் நமோநாராயணமே (21)

வந்தநாள் வந்தென் னெஞ்சிடங்கொண்டான்
மற்றோர் நெஞ்சறியான் ※ அடியேனுடைச்
சிந்தையாய்வந்து தென்புலர்க்கென்னைச்
சேர்கொடானிது சிக்கெனப் பெற்றேன்
கொந்துலாம் பொழில்சூழ் குடந்தைத் தலைக்
கோவினைக் குடமாடிய கூத்தனை
எந்தையை எந்தை தந்தை தம்மானை
எம்பிரானை யெத்தால் மறக்கேனே (22)

பேரானைக் குடந்தைப்பெருமானை ※ இலங்கொளிசேர்
வாரார் வனமுலையாள் மலர்மங்கை நாயகனை
ஆராவின்னமுதைத் தென்னழுந்தையில் மன்னிநின்ற
காரார் கருமுகிலைக் கண்டுகொண்டு களித்தேனே (23)

வந்தா யென்மனத்தே வந்து நீ புகுந்தபின்னை
எந்தாய்? போயறியா யிதுவே யமையாதோ?
கொந்தார் பைம்பொழில் சூழ் குடந்தைக் கிடந்துகந்த
மைந்தா! உன்னை யென்றும் மறவாமைப் பெற்றேனே (24)

தோடவிழ்நீலம் மணங் கொடுக்கும்
சூழ்புனல்சூழ் குடந்தைக்கிடந்த
சேடர்கொலென்று தெரிக்கமாட்டேன்
செஞ்சுடராழியுஞ் சங்குமேந்தி
பாடக மெல்லடியார் வணங்கப்
பன் மணி முத்தொ டிலங்குசோதி
ஆடகம் பூண் டொரு நான்குதோளும்
அச்சோவொருவ ரழகியவா (25)

வானை யாரமுதந் தந்த வள்ளலை
தேனை நீள்வயல் சேறையிற் கண்டுபோய்
ஆனை வாட்டியருளும் அமரர்தம்
கோனை ※ யாம் குடந்தைச் சென்று காண்டுமே (26)

இங்கே போதுங் கொலோ
இனவேல் நெடுங்கண் களிப்பக்
கொங்கார் சோலைக் குடந்தைக் கிடந்தமால்
இங்கே போதுங் கொலோ (27)

இன்றுரென்றறிடேன்
அன்னே யாழியொடும்
பொன்னர் சார்ங்கமுடைய வடிகளை
இன்றுரென்றறியேன் (28)

அறியோமே யென்றுரைக்கலாமே? யெமக்கு
வெறியார் பொழில்சூழ் வியன்குடந்தைமேவி
சிறியானோர் பிள்ளையாய் மெள்ளநடந்திட்டு
உறியார் நறுவெண்ணெயுண்டுகந்தார் தம்மையே (29)

அண்டத்தின் முகடழுந்த
அலைமுந்நீர்த் திரைததும்ப ஆ ஆ வென்று
தொண்டர்க்கு மமரர்க்கும்
முனிவர்க்கும் தானருளி * உலகமேழும்
உண்டொத்த திருவயிற்றி னகம்படியில்
வைத்தும்மை யுய்யக்கொண்ட
கொண்டற்கை மணிவண்ணன்
தண்குடந்தைநகர் பாடியாடீர்களே (30)

மூவரில் முதல்வனாய வொருவனை உலகங்கொண்ட
கோவினைக் குடந்தை மேய குருமணித்திரளை * இன்பப்
பாவினைப் பச்சைத்தேனைப் பைம்பொன்னை யமரர் சென்னிப்
பூவினை, புகழும் தொண்டரென் சொல்லிப்புகழ்வர் தாமே (31)

*திருக்குறுந்தாண்டகம்*

காவியை வென்ற கண்ணார் கலவியேகருதி * நாளும்
பாவியேனாக வெண்ணி யதனுள்ளே பழுத்தொழிந்தேன்
தூவிசே ரன்னமன்னும் சூழ்புனற்குடந்தையானைப்
பாவியேன் பாவியாது பாவியேனாயினேனே (32)

பொங்கார்மென்னிளங்கொங்கை பொன்னே பூப்பப்
பொருகயற்கண் ணீரரும்பப் போந்து நின்று
செங்கால மடப்புறவம் பெடைக்குப்பேசும்
சிறுகுரலுக்குடலுருகிச் சிந்தித்து * ஆங்கே
தண்காலும் தண்குடந்தை நகரும் பாடித்
தண்கோவலூர் பாடியாடக்கேட்டு
நங்காய்! நங்குடிக்கிதுவோ நன்மையென்ன
நறையூரும் பாடுவாள் நவில்கின்றாளே (33)

*திருநெடுந்தாண்டகம்*

முற்றாரா வனமுலையாள் பாவை, மாயன்
மொய்யகலத் துள்ளிருப்பாளஃதும் கண்டும்
அற்றாள்* தன் நிறைவழிந்தா ளாவிக்கின்றாள்
அணியரங்க மாடுதுமோ தோழீ யென்னும்
பெற்றேன் வாய்ச்சொல்லிறையும் பேசக்கேளாள்
பேர்பாடித் தண்குடந்தை நகரும் பாடி
பொற்றாமரைக்கயம் நீராடப் போனாள்
பொருவற்றாள் என்மகள் உம் பொன்னுமஃதே (34)

அன்றாயர் குலமகளுக் கரையன்றன்னை
அலைகடலைக் கடைந்தடைத்த வம்மான்றன்னை
குன்றாத வலியரக்கர்கோனை மாளக்
கொடுஞ்சிலைவாய்ச் சரந்துரந்து குலங்களைந்து
வென்றானைக் குன்றெடுத்த தோளினானை
விரிதிரைநீர் விண்ணகரம் மருவி நாளும்
நின்றானைத் தண்குடந்தைக் கிடந்தமாலை
நெடியானை யடிநாயேன் நினைந்திட்டேனே (35)

## 5. நம்மாழ்வார்

ஆராவமுதே யடியேனுடலம் நின்பாலன்பாயே
நீராயலைந்து கரையவுருக்குகின்ற நெடுமாலே
சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே. (36)

*திருவாய்மொழி*

எம்மானே என் வெள்ளைமூர்த்தி யென்னையாள்வானே!
எம்மாவுருவம் வேண்டுமாற்றா லாவா யெழிலேறே!
செம்மாகமலம் செழுநீர்மிசைகண் மலரும் திருக்குடந்தை
அம்மா மலர்க் கண்வளர்கின்றானே என் நான் செய்கேனே (37)

என் நான் செய்கேன் யாரே களைகண் என்னை என் செய்கின்றாய்
உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்
கன்னார் மதிள்சூழ் குடந்தைக்கிடந்தாய் அடியேனரு வாணாள்
சென்னாளெந்நாளந்நாளுனதாள் பிடித்தே செலக்காணே. (38)

செலக்காண்கிற்பார் காணுமளவும் செல்லுங்கீர்த்தியாய்
உலப்பிலானே எல்லாவுலகுமுடைய ஒரு மூர்த்தி
நலத்தால் மிக்கார் குடந்தைக்கிடந்தாய் உன்னைக் காண்பான் நான்
அலப்பாய்* ஆகாசத்தை நோக்கி அழுவன் தொழுவனே. (39)

அழுவன் தொழுவனாடிக்காண்பன் பாடியலற்றுவன்
தழுவல்வினையால் பக்கம் நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன்
செழுவொண்பழனக் குடந்தைக்கிடந்தாய் செந்தாமரைக் கண்ணா
தொழுவனேனை யுனதாள் சேரும் வகையே சூழ்கண்டாய். (40)

சூழ்கண்டாயென்தொல்லைவினையையறுத்து உன்னடிசேரும்
ஊழ்கண்டிருந்தே* தூராக்குழி தூர்த்த எனைநாளகன்றிருப்பன்
வாழ்தொல்புகழார் குடந்தைக்கிடந்தாய் வானோர்கோமானே
யாழினிசையே யமுதே அறிவின் பயனே யரியேறே. (41)

அரியேறே யென்னம் பொற்சுடரே செங்கட்கருமுகிலே!
எரியே பவளக்குன்றே நாற்றோளெந்தாயுனதருளே
பிரியாவடிமை யென்னைக்கொண்டாய் குடந்தைத் திருமாலே
தரியேனினி யுன்சரணம் தந்து என்சன்மம் களையாயே. (42)

களைவாய்துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்
வளைவாய் நேமிப்படையாய் குடந்தைக்கிடந்தமாமாயா!
தளராவுடலமென தாவி சரிந்துபோம்போது
இளையாதுனதா ளொருங்கப்பிடித்துப் போதவிசைநீயே. (43)

இசைவித்தென்னை யுன்தாளிணைக்கீழிருத்துமம்மானே!
அசைவிலமரர் தலைவர்தலைவா ஆதிப்பெருமூர்த்தி
திசைவில்வீசும் செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை
அசைவிலுலகம் பரவக்கிடந்தாய் காணவாராயே. (44)

வாரர்வருவாய் வருமென்மாயா மாயாமூர்த்தியாய்
ஆராவமுதா யடியேனுவியகமேதித்திப்பாய்
தீராவினைகள் தீர வென்னை யாண்டாய் திருக்குடந்தை
ஊரா* உனக்காட்பட்டும் அடியேனின்ன முழல் வேனோ.* (45)

உழலை யென்பில் பேய்ச்சி முலையூடவளையுயிருண்டான்
கழல்களவையே சரணாகக்கொண்ட குருகூர்சடகோபன்
குழலின் மலியச்சொன்ன வோராயிரத்துளிப்பத்தும்
மழலை தீரவல்லார் காமர் மானேய் நோக்கியர்க்கே. (46)

தொல்லையஞ்சோதி நினைக்குங்கால்
என் சொல்லளவன்றிமையோர் தமக்கும்
எல்லையிலாதன கூழ்ப்புச் செய்யும்
அத்திறம் நிற்க வெம்மாமைகொண்டான்
அல்லிமலர்த் தண்டுழாயும் தாரான்
ஆர்க்கிடுகோவினிப் பூசல் சொல்லீர்
வல்லிவளவயல்சூழ் குடந்தை
மாமலர் கண்வளர்கின்றமாலே (47)

மடந்தையர் வாழ்த்தலும் மருதரும் வசுக்களும்
தொடர்ந்தெங்கும் தோத்திரம் சொல்லினர்* தொடுகடல்
கிடந்தவெங்கேசவன் கிளரொளி மணிமுடி
குடந்தை யெங்கோவலன் குடியடியார்க்கே. (48)

## 6. பூதத்தாழ்வார்

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளுந் தண்பொருப்பு வேலை-தமருள்ளம்
மாமல்லை கோவல் மதிள் குடந்தை யென்பரே
ஏவல்ல வெந்தைக் கிடம். (49)

*இரண்டாந்திருவந்தாதி*

எங்கள் பெருமானிமையோர் தலை மகன் நீ
செங்கணெடுமால் திருமார்பா-பொங்கு
படமுக்கினுயிரவாய்ப் பாம்பணைமேல் சேர்ந்தாய்
குடமுக்கில் கோயிலாக் கொண்டு. (50)

## 7. பேயாழ்வார்

சேர்ந்த திருமால் கடல்குடந்தை வேங்கடம்
நேர்ந்தவென் சிந்தை நிறைவிசும்பும்-வாய்ந்த
மறை பாடக மனந்தன் வண்டுழாய்க் கண்ணி
இறை பாடி யாய விவை. (51)

*மூன்றாந்திருவந்தாதி*

விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர் வேங்கடம்
மண்ணகரம் மாமாடவேளுக்கை-மண்ணகத்த
தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென்கோட்டி
தண்குடந்தை நீரேற்றான் தாழ்வு. (52)

## திருமழிசைப்பிரான்

நாகத்தணைக்குடந்தை வெஃகா திருவெவ்வுள்
நாகத்தணை யரங்கம் பேரன்பில்-நாகத்
தணைப் பாற்கடல் கிடக்கு மாதி நெடுமால்
அணைப்பார் கருத்தனாவான். (53)

*நான்முகன் திருவந்தாதி*

## திருமங்கையாழ்வார் அருளிச்செயல்
## சிறிய திருமடல்

காரார் குடந்தை கடிகை கடன்மல்லை

## பெரிய திருமடல்

பொன்னி மணி கொழிக்கும் பூங்குடந்தைப் போர்விடையை

குருகுலம் பிரிண்டர்ஸ், வேதாரண்யம். போன் : 2